# தொண்டன்

1988

★ தை

4/50

ஓடுகின்ற நதிபோல கனியும் அன்பு
உள்ளகத்தில் தேனாக வழியவேண்டும்
சூடுகின்ற மலரைப் போல் பூத்த வாழ்வு
சுகந்த மணம் கமழ்ந்துநிதம் குலவவேண்டும்
பாடுகின்ற அருட்கவிகள் பரிமளித்து
பைந்தமிழுக் கணிசெய்து விளங்கவேண்டும்
தேடுகின்ற இறைவாநின் அருட்கண் நோக்கால்
தேசமெங்கும் சமாதானம் நிலவவேண்டும்.

எண்டிசையு மொளிருநிறை மதியம்போல
எவர்மதியும் குளிர்நிலவாய் பிறங்கவேண்டும்
வண்டினங்கள் மலர்களிலே தேனெடுத்து
மகிழ்ந்தினிது சுவைப்பதுபோல் வாழ்வுவேண்டும்
கண்டோர்தம் மனத்தினையுங் கவர்ந்திழுக்கும்
கவினொழுகும் பூம்பொழில்போல் இதயம்வேண்டும்
உண்டினிது வாழ்ந்துவரு உயிர்கள்மீதோர்
உரோமமும் சிதைவுறாது காக்கவேண்டும்.

பரிதவித்துப் படுகுழியில் கிடப்போர் தம்மை
பட்சமுடன் கரத்தெடுத் தணைக்கவேண்டும்
உரம் மிகுந்த வஞ்செயலைப் பஞ்சேயாக்கும்
உயர்மறையின் தத்துவங்கள் ஒலிக்கவேண்டும்
தரமான பயனுதவி மறைந்துபோன
சரித்திரங்கள் மிகவிரைவில் புதுக்கவேண்டும்
பரம் பொருளின் பெருங்கருணை பெற்றேயுய்ய
பத்திநெறி வசப்பட்டுச் செபிக்கவேண்டும்.

— இலக்கியமணி
ஆரையூர் நல். அளகேசமுதலியார்

## கிறீத்தவ இலக்கியத் திங்களேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

தை — 1988
மலர்: 19 இதழ்: 11

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

உள்ளே....

1. இதயத்திலிருந்து — 1
2. தை மகளுக்கோர்... — 2
3. புத்தாண்டுச் சிந்தனை — 3
4. அருள்திரு ஹென்றி... — 4
5 இரங்கற்பா — 7
6. விவிலியம் கூறும்... — 8
7. சுவைக்கச் சில துளிகள் — 10
8. இளைஞர் அரங்கம் — 11
9. ஆற்றலின் ஊற்று செபம் — 14
10. தமிழர் பெருநாள் — 15
11. சிறுகதை — 16
12. இலங்கை எரியும் நாடா — 20
13. கத்தோலிக்க திருச்... — 21
14. உதயம் வெளியீட்டு விழா — 25
15. குறுக்கெழுத்துப் போட்டி — 27

எழுதுங்கள் !

கிறீத்தவ — சமூகச் சிந்தனைகளைக்கொண்ட ஆக்கங்களை தொண்டன் எதிர்பார்க்கின்றன்.

புதிய சிந்தனைகளுக்கு — புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறன்.

எழுதுங்கள்! ஏற்றவையாயின் பிரசுரிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இதயத்திலிருந்து...

**தை** பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தை பிறந்துவிட்டது. வழி பிறக்குமா?

கடந்துபோன ஆண்டுகள் ஒவ்வொன்றும் நிறைவேறாத எதிர்பார்ப்புக்களையே விட்டு விட்டுச் சென்றன. கூடவே மக்களது சுமைகளும், அவலங்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

முடிவே இல்லாத தொடர்கதையாய் துன்பங்கள் தொடர்ந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில் பிறந்துள்ள புத்தாண்டு விடிவைக் கொண்டுவருமா? என்பதுவே மக்களின் ஏக்கம். ஆனால், நாட்டு நடப்புகள், ஆழமற்ற மேலோட்டமான முயற்சிகள் அவநம்பிக்கையையே அறுவடை செய்கின்றன.

இந்நிலையில் என்ன சொல்வது? யாரை யார் தேற்றுவது?

ஆயினும் எதற்கும் ஓர் எல்லையுண்டு. எல்லை மீறுவது எவருக்கும் நன்மை தரா.

பொறுப்புள்ளவர்கள் உண்மை நிலையை உணர்ந்து உளம் மாறினாலன்றி நிலைமைகள் திருந்த இடமில்லை.

பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமேயின்றி தீர்வுகளால் மறைக்க முயலுதல் கூடாது.

கண்டிப்போன இரத்தத்தை கட்டுப்போட்டு மறைக்க முயன்றால் ஆபத்து காலுக்குத்தான்.

இத்தனை இக்கட்டுகளுக்குப்பின்னும் இது உணரப்படவில்லை என்றால் பலனை அனைவரும் (ஜனநாயக நாடல்லவா?) பகிர்ந்துதான் அனுபவிக்க வேண்டும்.

அவசர அவசரமாய் அழிந்துகொண்டிருக்கும் "இந்த நாட்டை மீண்டும் "கட்டி எழுப்ப — இனவிரோத சிந்தனைகளை அகற்றி உண்மையான தேசிய நோக்கோடு இப்புத்தாண்டிலாவது பொறுப்புள்ளவர்கள் செயற்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

— ஆசிரியர்.

---




நீதியின் பால்
பசிதாகமுள்ளோர்
பேறுபெற்றோர், ஏனெனில்
அவர்கள் நிறைவு பெறுவர்.

மத். 5/6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தை மகளுக்கோர் விண்ணப்பம்

தை மகளே உந்தனுக்கு
தமிழனிடும் விண்ணப்பம்
கை நிறைய வளையூட்டி
கமகமக்கப் பொங்கலிட்டு
நெய்யோடு தேன் சேர்த்து
நெஞ்சாறப் படைப்பதற்கு
உய்வில்லா உன்பிள்ளை
உழறுவதைக் கேளுமடி


சமாதானம் வந்ததென
சந்தோசப் பட்டதற்கு
சமாதானம் சண்டைதரத்
தலைக்கனமும் செய்ததடி
அமையாத வாழ்க்கையினால்
ஆகுதடி துயரெல்லாம்
இமைமூடித் தூங்காமல்
இறந்திறந்து வாடுகிறோம்.

ஆயுதப் பேய் அகன்றோட
அனைவருமே அமைதிபெற
தாயுனக்கு பொங்கலிட
தாராள வளமோட
நேயமுடன் நல் வார்த்தை
நயன்றிடுவா யென்தாயே
தூயமனமோ டேயாம்
நேர்மையெனும் வழிவாழ

செல்வன் சிகண்டிதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# புத்தாண்டுச் சிந்தனை

எம். வி.

ஆண்டொன்று போக வயதொன்று கழிந்து புத்தாண்டு ஒன்று பிறந்தது.

பிறந்துள்ள புத்தாண்டு அனைவருக்கும் அமைதியும், மகிழ்ச்சியும், பாதுகாப்பும் நிறைந்த ஆண்டாக விளங்க வேண்டும் என்பது எமது வேண்டுதல்.

கடந்துபோன சில ஆண்டுகள் மனம்போன போக்காக கால் போன போக்காகக் கடந்து சென்றுவிட்டன. அவை பதித்துச் சென்றுள்ள சுவடுகள் ஆழமானவை ஆனால் பெருமைப்படக்கூடியவை அல்ல.

பிறந்துள்ள புத்தாண்டாவது இன்னல் களைந்து இன்பம் பயக்கும் ஆண்டாக, பிரிவுகள் அழிந்து ஒற்றுமை சிறக்கும் ஆண்டாக நம் ஒவ்வொருவருக்கும் வாய்க்குமா?

புதிய வானம், புதிய பூமி என்பது மீட்பின் சங்க நாதம்.

வானமும் வையமும் புதிதாவது இயற்கையிலல்ல எமது வாழ்க்கையிலேயே உள்ளது.

குட்டையில் ஊறிய மட்டைகள் போன்றுவிட்டு வெளியேற முடியாத பழமை வாதங்களுக்குள்ளும், சுயநலச் சாக்கடைகளுக்குள்ளும், போலி கௌரவங்களுக்குள்ளும் நாம் சிக்கிக் கிடக்கின்றவரை நிஜங்களைத் தரிசிக்கவே முடியாது.

இருட்டையே ஒளியென்று நாம் எத்தனை காலம் ஏமாந்து கொண்டிருப்பது?

விடியற்காலக் கதிரவனின் செம்மைக் கதிர்கள் ஊடுருவ நம் இதயச் சாளரங்களைத் திறக்கத்தான் வேண்டும். அங்கு புது ஒளி பாயவேண்டும். புதிய சிந்தனைகள் தோன்றவேண்டும். குறுகிய வாதங்களும், குள்ளநரித் தந்திரங்களும் களைந்து போக, மாசற்ற சிந்தனைகளும், மனிதாய நோக்கங்களும் அங்கு குடியேற வேண்டும்.

காலங்கள் வருகின்றன போகின்றன. அவை நமக்காகக் காத்து நிற்பதில்லை, ஆனால் அக்காலத்தில் ஏற்படும் நிகழ்வுகள் வரலாற்றில் நிலைத்துவிடுகின்றன. வாழ்க்கையை அசைத்தும் விடுகின்றன. ஆகவே, வரலாற்றில் நாம் பதிக்கின்ற சுவடுகளை மிகுந்த பொறுப்புணர்வோடும், எச்சரிக்கையோடும் எடுத்து வைக்க வேண்டும். இல்லையேல் நிகழ்காலம் மட்டுமல்ல, எதிர்காலமும் எம்மை ஏமாற்றிவிடும்.

பல எதிர்பார்ப்புகளோடு விடிந்துள்ள புத்தாண்டு எற்றமுள்ள ஆண்டாக மிளிர்வது நம் ஒவ்வொருவருடைய கைகளிலும்தான் உள்ளது.

கடந்தகாலங்களில் நாம் சிலவற்றைப் புரிந்துகொள்ளத் தவறியிருக்கிறோம், சிலவற்றைப் புரிந்துகொள்ள மறுத்திருக்கிறோம். அதன் பயனை அனுபவித்துமிருக்கிறோம்.

விவிலியம் காட்டும் இஸ்ராயேல் மக்கள் போன்று அறியாமையாலும் சில வேளை அகம்பாவத்தாலும் இறைவனின்குரலை மறுத்தது போன்று நாமும் பல வேளைகளில் உண்மைகளை அறியாமலும், அறிய விரும்பாமலும், அறிந்தும் ஏற்றுக்கொள்ளாமலும் ஓரந்தள்ளியிருக்கிறோம்.

இப்போது இன்னுமொரு ஆண்டு — இன்னுமொரு வாய்ப்பு இயற்கை தந்திருக்கிறது. இல்லை இறைவன் தந்திருக்கிறான். அதற்கு செயற்கையாக 1988ம் ஆண்டு என்று பெயர் சூட்டியிருக்கிறோம். ஆனால் என்ன செய்யப்போகிறோம்?


மீண்டும் குட்டையிலே ஊறி குடியிருக்கப் போகிறோமோ? அன்றேல் சிந்தனைச் செட்டைகளை விரித்துப் புதிய வாழ்வு காணப் பறக்கப்போகிறோமா?

சிந்தியுங்கள்!

ஆண்டு முடிய இன்னும் நீண்ட இடைவெளி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பொன்மனச் செம்மல்

# அருட்திரு. ஹென்றி பொன்னையா

போதகர் கே. இயேசுராசா

1987ம் ஆண்டு மார்கழி மாதம் 23ம் நாள் மட்டுநகரின் கத்தோலிக்க ஆலயங்களின் மணிகள் எல்லாம் சோக கீதம் இசைத்தன. மணியோசை கேட்ட மக்கள் எல்லாம் ஏன்? ஏன்? ஏன்? என்று வினு தொடுத்தனர். வினுவுக்கு விடையாக வந்தார் பொன்மனச் செம்மல் அருட்திரு. ஹென்றி பொன்னையா அடிகள். ஆம் தந்தையவர்கள் இயற்கை எய்திவிட்டார்கள். இறைபதம் சேர்ந்துவிட்டார்கள். அன்றுதான் பொன்மனச் செம்மல் எனப் புகழ்பெற்ற தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் இயற்கை எய்தினுர். இதனுலேயே அடிகளாரையும் இப்பெயரால் அழைப்பது பொருத்தம் என உணர்கின்றேன்.

## பிறப்பும் — கல்வியும்

அடிகளார் மட்டக்களப்பைச் சேர்ந்த சிங்களவாடி என்னும் கிராமத்தில் 27-3-1907ம் ஆண்டு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பொன்னையா என்பவருக்கும் மட்டுநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லம்மா பொன்னையா என்பவருக்கும் இரண்டாவது புதல்வனுக இப்புவி உதித்தார். இவருக்கு ஓர் அண்ணன், ஒரு தங்கை என இரு சகோதரர்கள். தங்கையின் பிறப்போடு தாயாரையும் சேர்த்து இழந்தார். ஆறு வயது வரை தந்தையின் பராமரிப்பில் பாதுகாக்கப்பட்டு, இயேசு சபைக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அண்ணன் இல்லறம் ஏற்க — தம்பி துறவறத்தில் நாட்டமுற்ருர்; ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு மரியாள் பாடசாலையில் தொடங்கி, கல்முனையில் மரியாள் பாடசாலையில் முடித்தார், இந்நாட்களில்தான் திருமுழுக்கு — நற்கருணை — உறுதிப்பூசுதல் ஆகிய திருவருட் சாதனங்களைப் பெற்ருர். தாமாகவே துறவு பூண எண்ணங்கொண்டார். அன்றிருந்த ஆயர் அதி. வந் கஸ்ான் றொபிசே அவர்கட்கு தமது எண்ணத்தை வெளியிட்டார். ஆயரின் பரிசோதனையின்பின் அழைப்பும் கிடைத்தது. அழைப்பை ஏற்ருர். 1928ம் ஆண்டு குருத்துவக் கல்லூரிக்குள் நுழைந்தார்.

## குருமட வாழ்வு

அந்நாட்களில் சிறிய குருமடம் என்றில்லை. தாமே சிறிய குருமட வாழ்வை வாழ்ந்து, இன்று 'பூனு'வில் இயங்கும் பாப்பரசர் குருமடம் அன்று கண்டி அம்பிட்டியில் இயங்கியது. அங்குதான் தமது குருத்துவப் படிப்பைத் தொடர்ந்தார். குருமட வாழ்வில் பலரும் போற்றும் பண்பாளனுக விளங்கினுர். தமது ஆன்ம குருவாக அருட்திரு. 'லூ ஆர்' என்பவரைத் தேர்ந்துகொண்டார். தந்தை அவர்கள் ''தமது மகிழ்ச்சியான காலத்தைக் குருமட வாழ்வில் கண்டேன்'' என்று பலமுறை கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## குருத்துவம் ஏற்ற குணக்குன்று

கொண்ட குறிக்கோளை தன் லட்சியமாக்கி அயராது உழைத்தார். வெற்றியும் கண்டார். இதன் பயன் 26-8-1934ல் அன்று கண்டி மறைமாவட்ட ஆயரான அதி. வந். பீற் விக்மோர் O. S. B. என்பவர் திருக்கரத்தால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அன்று திருமலை மறைமாவட்டமாகவும், இன்று திருமலை - மட்டுநகர் மறைமாவட்டமாகவும் பெயர்பெறும் நம் மறைமாவட்டத்திற்காக உழைத்தார். இவ்வுழைப்பு 26-8-1984 தமது குருத்துவப் பொன்விழா காணுமளவும் நீடித்து மேலும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்தன.

## பொன்விழா கண்ட புண்ணிய சீலர்

எமது மறைமாவட்டம் எத்தனையோ குருக்களை உருவாக்கி கிறிஸ்துவின் பணியை விரிவடையச் செய்தது. இருந்தும் இம்மறைமாவட்டக் குரு என்ற ரீதியில் முதன்முதல் பொன்விழா கண்ட பேறு பொன்னையாவுக்கே உரித்தானது.

## பொன்விழாவின் புகழாரங்கள்

பொன்விழா நாயகனை நமது இன்றைய ஆயர் அதி. வந். ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை வாழ்த்தினார்:

"ஒருவருடைய வாழ்விலே ஐம்பது ஆண்டுகளை சேவை வாழ்வாக நிறைவேற்றுவது அளப்பரிய ஒன்றாகும். அருட்திரு பொன்னையா அடிகளார் தமது அர்ப்பண வாழ்வை ஆண்டவருக்கும் — அவர் மக்களுக்கும் ஏற்றவிதத்தில் வாழ்ந்த ஓர் உத்தமர்" என்றார்.

எமது முன்னாள் ஆயர் அதி. வந். எல். ஆர். அன்ரனி அவர்கள்:

"என் பணிக்காலத்தில் என் பணியில் தோள் கொடுத்து உதவிய குருக்களில் அருட்திரு பொன்னையாவும் ஒருவர். இப்பேர்ப்பட்ட விழாக்கள் பலருக்கும் கிடைப்பது அரிது. ஆகவே கிடைத்தற்கரிய பேறுபெற்றவரை நானும் வாழ்த்துகிறேன்" என்றார்.

தந்தையின் திருக்கரத்தால் திருமுழுக்காட்டப்பட்டு, இன்று இம்மறை மாவட்டத்தின் மூத்த போதகராக விளங்கும் திரு. கே. இயேசுராசா அவர்கள் தந்தையைப் பேட்டி ஒன்றின்மூலம் பாருக்கு வெளிப்படுத்திச் சிறப்பித்தார்.

## பணியும் - பணித்தளங்களும்

பணிபுரிவதிலே பரமதிருப்தி கொண்ட அடிகளார் மட்டக்களப்புக்குத் தெற்கே பொத்துவில் வரையுள்ள சகல பங்குகளிலும், அம்பாறை, இக்கினியாகலை, சொறிக்கல்முனை உட்பட திருமலை பெரியகடைப் பங்கு, மூதூர் பங்குகளிலும் சிறப்புப் பணியாற்றினார். பணிக்காலத்தில் தமது முதல் வேலையாக "சாதி என்ற பூதத்தினை விரட்டிடவேண்டும், நீதி என்ற சமுதாயம் உருவாகிட வேண்டும்" என்ற விருதுவாக்கை கடைப்பிடித்தார். குறிப்பாக புளியந்தீவு, கல்முனை, கல்லாறு, அக்கரைப்பற்று ஆகிய பங்குகளில் இப்பணியில் வெற்றியும் கண்டார்.

## பட்டங்களும் - பதவிகளும்

'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'. தாம் கற்கவேண்டும் கற்றதை மற்றவர்க்குக் கொடுக்கவேண்டும் என்ற விருப்புடன் கற்றார். இதன் பயனாக;

1. கேம்பிரிஜ் சீனியர் பட்டம்.
2. குருமடத்தில் பி. எச். டி. ஒனர்ஸ்.
3. வேதாகம விற்பன்னர் பி. டி. கண்டி.
4. கதிர்காமர் மெடில் — ஆங்கிலத்தில் புனித மிக். கல்லூரி.
5. தமிழ்ப் பாண்டித்தியம் — இந்தியா.
6. மறைக்கல்வி சிறப்புப் பயிற்சி — அமெரிக்கா.

ஆகிய பட்டங்களைச் சுமந்துநின்றார். இதனாலோ என்னவோ அவர் எப்போதும் கட்டையாகவே காட்சிதந்தார்.

## மறைக்கல்வி நடுநிலையத்தின் முதல் முத்து

எமது மறைமாவட்டம் மறைக்கல்வி முறையில் பின்னடைந்திருந்த வேளை அது. காரணம் வெளிநாட்டுக் குருக்கள் தாம் தெரிந்துகொண்ட கொச்சைத் தமிழில் தந்த மறைக்கல்விப் பாடம் புரியாதநிலைமறுபுறம் இலங்கை அரசாங்கம் பாடசாலைகளைத் தேசிய மயமாக்கிய காலகட்டம். இந்நிலையில்தான் 1967ம் ஆண்டு அதி. வந். ஆயர் இக்னேசியஸ் கிளனி யே. ச. அவர்கள் நமது அடிகளாரை மறைக்கல்வி நடுநிலைய இயக்குனராகவும், ஒரு மறைக்கல்வி நடுநிலையத்தையும் உருவாக்கினார். எப்பணியைக் கொடுத்தாலும் ஏற்றுச் சிறப்பிக்கும் ஆற்றல் படைத்த தந்தையவர்கள் பங்குகளைப் பார்வையிட்டார், பாடசாலைகளைத் தரிசித்தார், குறைகளை அறிந்தார் - மறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாசிரியர்களை நியமித்தார் பயிற்சிக்காகப் பலரைத் திண்டிவனம் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பிவைத்தார். இந்நாட்களில் மறைக்கல்விப் பரீட்சைகளும், படக்காட்சிகளும், விவிலிய வினாவிடைப் போட்டிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மறைக்கல்வி நடுநிலையத்தின் நன்றிக் கடன்

இன்று விவிலிய மறைக்கல்வி - திருவழிபாட்டு முக்கூட்டுப் பணியகமாக விளங்கும் எமது நிலையம் இம்மகானை மதித்தது. இவரது குருத்துவ பொன்விழாவை ஒட்டி ஓர் மறைக்கல்விக் கையேட்டை வெளியிட்டது. மறைக்கல்வி போதிக்கப்படவேண்டும் என்ற தாகம் கொண்ட தந்தை அவர்களுக்கு 26-8-1984ல் ''அருள்வழி செல்வோம்'' என்ற ஆசிரிய துணை நூல் ஒன்றை வெளியிட்டு தந்தை அவர்களுக்குச் சமர்ப்பித்து தமது நன்றியைக் காட்டி நின்றது இச்செயலை அன்றைய இயக்குநர் அருட்திரு. டி சாமிநாதனும், துணையாக மறை போதகர்களும் செய்துமுடித்தனர்.

## உறுதிகொண்ட உள்ளத்தோனின் சாதனை

தீராத துயரங்கள் தீப்பிழம்பாய்ச் சுட்டாலும், இக்கட்டான எவ்வேளையானாலும், துயருற்றோரைத் தேடி, ஓடி, நாடி வந்து நல்விதயம் காட்டி 'தம்பி எப்படி உன்பாடு' என்பார். இந்நிலை இறக்கும் வரை அவரிடம் நீடித்திருந்தது. தள்ளாத வயதிலும் தான் கெட்டாலும் தக்கார் கெடக்கூடாது என்று வாழ்ந்த பெருமகன். படுக்கையில் விழும்வரை வீதியின் பள்ளங்கள் - மேடுகள் தாண்டிப் பயணம் செய்து, தமது அன்பர்கள் நண்பர்களைத் தரிசித்து வந்தவர். நோயுற்றோரைத் தேடி வைத்தியசாலையைத் தரிசிக்கத் தயங்கமாட்டார். ஆனால் அதே வைத்தியசாலையில் தம்மைப் பார்க்க வந்தோரைக் கண்குளிரக்காண அவர் கொடுத்து வைக்கவில்லை. உணர்ச்சியற்றே இருந்தார். 'கைமாறு கருதாக் கரும வீரன் தாம் செய்த உதவியை மீண்டும் பெற விரும்பாதவர்'போல் கண்மூடிக் கிடந்தார் இதுவும் அவரது பெருந்தன்மையின் சிறப்பே.

> சில மனிதர்களின் அறிவு பேசும் அளவுக்கு அவர்கள் இதயம் பேசுவதில்லை.
>
> நீ ஏமாறாமல் இருக்க விரும்பினால் எதையும் எதிர்பார்க்காதே.

## கர்ம வீரருக்கு எமது கண்ணீர் அஞ்சலி

அன்பின் ஜோதியாய் — பாசத்தின் பிறப்பிடமாய்-கருணையின் பெருங்கடலாய் வாழ்ந்து - பலபேரை வாழவைத்து உயர்த்திவிட்ட உத்தமன்.

புன்சிரிப்புச் சிந்தி — புகழோடு வாழ்ந்து— எம் நெஞ்சம் நிறைந்து வாழ்ந்து விட்டு, இன்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொள்ளும் பொன்மனச்செம்மல் பொன்னையா அடிகளுக்கு எம் கண்ணீரால் அஞ்சலி செய்வோம்.

## நல்ல மனம் படைத்த அமைதியின் அண்ணல்

''உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை, மண்ணுலகில் நல்மனத்தோர்க்கு அமைதி'' என்று ஆண்டவன் பிறப்பை ஒட்டி வானவர் பாடிய பாடல் இது. இப்பாடல் ஒலித்ததை நாம் நினைவு கூரும் நாள் மார்கழி 24ம் நாள் நள்ளிரவு அதேநாள் காலை 10 00 மணிக்கு ஆண்டவன் சந்நிதியில் அமைதியின் அண்ணல் துயில் கொண்ட காட்சி காண்போரைக் கண் கலங்கச் செய்தது. ஆம் இம்மண்ணுலகில் நல்ல மனம் படைத்த நம் தந்தை அமைதி கொண்டு விட்டார். விண்ணக இன்பத்தைச் சுவைக்க - மகிமையின் தெய்வத்தை நாடிச் சென்றுவிட்டார். இந்த அமைதியின் அண்ணலுக்கு நம் நினைவுச் சின்னமாக கல்லறை எழுப்ப ஆலையடிச்சோலையில் அமைதி கொள்கின்றார் எம் இதயத்தில் ஓர் நினைவாலயம் எழுப்புவோம். இறைவன்பால் இவரது ஆன்ம விடுதலைக்காக நாளும் செபிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அருள்தந்தை ஹென்றி பொன்னையா

## அடிகளாரின் பேரில்

# இரங்கற்பா


மன்பதை மேற்தாம் கொண்ட மறுவறு
அன்பதை அழகாகஎடுத்துக் காட்ட
மண்ணில் மாடடையில் ஏழையாய் வந்துதித்த
விண்ணவனின் அன்பிற்கு நன்றி காட்ட
உற்றாரின் பெற்றோரின் உறவினரின்
பற்றகற்றி பரமன் பணி நல்லுணர்வாக
திருமலை மேற்றிராசனத்திற் பலபங்குகளிற்
குருவாகப் பாடசாலை அதிபராக நீர்
பணியாற்றி பாமரரின் துயர் துடைத்தீர்
கல்முனையை நாடிவந்து எம்சாலை
அதிபராய்ப் பங்குக் குருவாய்ப்பணி நல்கி
மந்தைகள் மனம்மகிழ அவர்வாழ்விற் கலந்து
நொந்திருந்தால் நொடிப்பொழுதில் உதவிநல்கி
துயர் துடைத்து துணிவளித்து உயர்ந்துவாழ
வழிவகுத்து வாழ்க்கை அமைத்துதவினீர்
அன்புடன் நீர் வாழ்வமைத்த இளைஞர் யுவதிகள்
இன்புடன் உம் புகழ்மணக்க வாழ்கின்றனர்
இவ்வுலகில் வாழ்ந்தோர்கள் தம்வாழ்வில்
'வெள்ளிவிழா' காண்பதுவோ அரிதுஅரிது எனினும்
நற்குருவாய் நீர்வாழ்ந்து நலம் புரிந்து
'பொன்விழா' கண்ட புண்ணியனே உனைப்பாட
புல்லான நானும் வல்லேனல்லன் இப்புவியில்
வல்லவனோ இன்றுமை அழைத்துள்ளான் ஏனோ
நல்லவர்க்கு நலமளிக்க எண்ணினனோ நானறியேன்
எம்மவரைப் பிரிந்து நீர் இறையரசில் எந்நாளும்
இணையில்லா சாந்திபெற வேண்டுகின்றோம்
நம்மவர்க்கு மரணம் நற்பிறப்பென்று கூறும்
மறை நினைந்து மனத்துயர் மறந்து
இறையரசில் இன்பம் காணப் போற்றுகின்றோம்.
நன்றிக் கடன் ஈந்து நாளும் வேண்டிநிற்கின்றோம்.

கார்மேல் பாத்திமா கல்லூரி,
கல்முனை.

றேஸ் ஜோசப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# விவிலியம் கூறும் விசுவாசம்

— றெக்ஸ் ஜோசப் —

விவிலியத் திருமறை நூலின் பார்வையில் சரித்திரம் அல்லது வரலாறு என்பது பழையதை நினைவூட்டும் உசாத்துணை மட்டுமல்ல எதிர்காலத்தை நிர்ணயிக்க உதவும் படிப்பினையும் ஆகும். தமது அருட் பிரசன்னத்தை, தம் ஜனத்தின் மேல் அவர் கொண்ட அன்புக்கரிசனையை மீண்டும் மீண்டும் தமது அருட்செயல்களால் வெளிப்படுத்திய இறைவனின் மாபெரும் அருட்செயல்தான் வரலாறு என்பது யூதர்களின் கணிப்பாகும். எனவே தான் பபிலோனியா எகிப்து, உரோம் சாம்ராஜ்சியம் போன்ற நாடுகள் தம் வரலாற்றில் பல தலைவர்களை ஏற்றுக்கொண்ட போதிலும்; விவிலிய காலத்து யூதர்கள் - அத்தகைய தலைவர்க்ள் பலர் இருந்தும் இறைவன் ஒருவரையே தங்க்ள் வரலாற்றின் தலைவனாக, தேவனாக ஏற்றனர். தலைவர்கள் எனப்பட்டவர்கள் எல்லோரும் ஆபிரகாம், மோயீசன், தாவீது போன்றோர் - இறைவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவரது திருச்சட்டத்தைச் செயற்படுத்தும் நிறைவேற்றுனர்களாகவே கருதப்பட்டனர்.

தாங்கள் ஒரு சமூகம் எனும் சுய உணர்வினால் மட்டுமல்ல; தங்கள் இறைவனை யாவேயின் சமூகம் எனும் அசையாத விசுவாசத்தினாலேயே இஸ்ராயேலின் வரலாற்றில் தொடர்ச்சியும் ஒருமைப்பாடும் உண்டாகின்றது. திருமறைநூலில் வரலாறு என்பது இறைவனுக்கும் அவரது சனத்துக்கும் உள்ள தொடர்புகளையும் அத் தொடர்புகளால் ஏற்படும் விளைவுகளையும் உள்ளடக்கிய ஒரு விசுவாசமாக அமைகின்றது.

வரலாறு என்பது இடர்களையும் ஆபத்துக்களையும் கடந்துவந்த ஒரு சமூகத்தின் வளர்ச்சி என்பது மட்டுமல்ல; அந்த வளர்ச்சியில், இறைவனை அவரது உண்மையான இலட்சணங்களுடன் அறிந்து கொள்ள உதவும் ''இறை அறிவியல்'' என்பதும் விவிலியத்திற் புலனாகிறது. வரலாற்றின் மூலம் இறைவன் உலகில் எவ்வாறு செயல்படுகின்றார் என்றும் மறுக்க முடியாத ஆணைகளான அச் செயற்பாடுகளுக்கு மனிதன் எப்படிப் பதில் தருகிறான் என்பதும் விளங்குகின்றது. இதுவே மறையியல் அறிஞர்களிடையேவரலாற்றின் இறையியல் (Theology of History) என்று கூறப்படும்.

இத்தகைய தனித்துவமான சித்தாந்த முறையில் வரலாற்றை கணிக்கும் முறையிலும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. இதன்படி ஒரு நிகழ்ச்சி நடந்தேறிய நாளும், நேரமும், இடமும் அறிவுக்கு முக்கியமே ஆயினும், அதை விட நடைமுறைக்கும் படிப்பினைக்கும் அதிமுக்கியமானது அந் நிகழ்ச்சி அன்றைய சமூகத்தை எவ்வாறு பாதித்தது. இன்று நம்மை அது எவ்வாறு பாதிக்கின்றது என்பதே. இத்தகைய ''விசுவாசம் நிறைந்த வரலாற்று இறையியல் ஆத்தும சோதனை'' தான் ஒரு நிகழ்ச்சியை வெறும் புராதனமாக உறையவைக்காமல், ஓடும் உதிரம்போல சமூகத்துக்கு உணர்வையும் ஊட்டத்தையும் அளிக்கும் கருவியாக மாற்றும்.

இத்தகைய நுணுக்கமான உணர்வுகளைக் கொண்டிருந்ததனால்தான் விவிலிய யூதர்கள் தங்கள் முன்னோர்களிலும் அவர்களது வரலாற்று அனுபவங்களிலும் அத்தனை பற்று வைத்து தங்களையும் அவர்களோடு ஒன்றித்

துன்பமில்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு அவன் அடைந்த இன்பமே துன்பமாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

துக் கொண்டனர். விவிலியயூதர்களுக்கு விசுவாசம் என்பது வரலாறு அரசியல் சமூகத் துறைகள் அத்தனையையும் உள்ளடக்கிய அன்றாட வாழ்வின் உறுதிப்பாடு.

விவிலியத்தின் பார்வையில் விசுவாசம் என்பது சத்தியங்களின் தொகுப்புக்கு அமைவல்ல அது ஒரு மனநிலை. உறுதியான பணிவான ஆனாலும் திறந்த மனநிலை இறந்தகாலத்தில் உறுதியும் இறைப் பராமரிப்பில் பணிவும் எதிர்காலத்தில் நம்பிக்கையும் கொண்ட திறந்த மனநிலை. இத்தகைய உறுதியான அமைவான, திறந்த மனநிலையையே நாம் ஆபிரகாமிலும், யாக்கோபிலும், சூசையிலும் மோயீசனிலும் அன்னை மரியிலும் காண்கிறோம். இத்தகைய திறந்த ஆனாலும் இறைதிட்டத்துக்கு அமைவான மனநிலைக்கு விசுவாசத்துக்கு முழுமையான உதாரணமாகப் புதிய ஏற்பாட்டில் இறைமகன் யேசு திகழ்கின்றார்.

யூத மக்களின் விசுவாச அறிக்கை இறையியல் தத்துவங்களை உள்ளடக்கிய ஒரு கோட்பாடு அல்ல மாறாக அவர்களது சமூகத்தின் காலம் (நிறைந்த காலம்) நிகழ்காலத்திலேயே நடைபெறும் புதுமையான அதிசயத்தை அந்த விசுவாச அறிக்கையில் நாம் காணலாம்.

''என் தந்தை ஒரு அரமேய நாட்டு நாடோடி அவர் சொற்ப சனத்தோடு எகிப்துக்குச் சென்று அங்கு பலத்த பெரிய இனமானார். எகிப்தியர் எங்களை ஒடுக்கித் துன்புறுத்தியபோது எங்கள் கூக்குரலையும் முறையீட்டையும் கேட்ட எங்கள் முன்னோரின் இறைவன் மாபெரும் அருஞ் செயல்களாலும் பயங்கர அடையாளங்களாலும் எங்களை எகிப்தியர்களிடமிருந்து மீட்டு அழைத்து வந்து பாலும் தேனும் பொழியும் இந்த நாட்டை எங்களுக்குக் கொடுத்தார்'' (உபாகமம் 26/5-10)

> வேலையை விட்டு ஓடிச் செபத்தில் மறையாதே! செபத்தை விட்டு ஓடி வேலையில் மறையாதே.

இந்த ஜெபத்தில் நம் நாட்டின் வரலாற்றோடு, தமது மூதாதையர்களோடு ஒவ்வொரு பிற்காலத் தலைமுறையினரும் எவ்வளவு ஒன்றித்திருந்தனர் என்பது வெள்ளிடைமலை. இத்தகைய விசுவாசம் ஒருவகையிற் பார்க்கும் போது பழமைவாதம், பாரம்பரியவாதம் போலத் தோன்றினாலும்; இன்னுமொரு கோணத்தில் அணுகும்போது மனிதவாழ்வின் சமூக இறைமைக்கும், ஒருமைக்கும் கொடுக்கப்படும் மகத்துவம் இதில் வெளிப்படுவதைக் காணலாம்.

முக்காலமும் வழிநடத்தும் இறைபராமரிப்பு இங்கு அறிக்கையிடப்படுவது மட்டுமன்றி இறந்த காலத்திற்கான நன்றியுணர்வும், நிகழ் காலத்திற்கான கடமையுணர்வும், எதிர்காலத்திற்கான பொறுப்பணர்வும் ஒருங்கே வெளிப்படுத்தப்படுவதும் தெளிவாகிறது, இத்தகைய உறுதிமிக்க, பணிவான ஆனால் திறந்த மனநிலையே விவிலியத்தில் நாம் காணும் வாழும் விசுவாசமாகும்.

இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை வைத்து எதிர்காலத்தைப் பற்றிய ஒரு திறந்த உறுதியான மனநிலையுடன் ஆபிரகாம் வாழ்ந்ததினாற்றான். புதிய, பெரிய இனத்தின் தந்தையாகும்பேறு பெற்றார். அத்தகைய மனநிலையைக் கொண்டிருந்ததனாற் தான் மோயீசன் இறைகுலத்தை அதன் அடிமைத்தளையிலிருந்து மீட்டு அதனை இறைவனுக்கமைந்த ஒரு இறைமைச் சமூகமாக உருவாக்கிய சிற்பியானார். அத்தகைய அமைந்த, திறந்த, உறுதியான உளப்பாங்கின் காரணத்தினாலேயே கன்னிமரியாள் இறைமகனின் தாய் என்ற பேறு பெற்றாள் ஆகவே, இத்தகைய வாழ்வோடு சார்ந்த விசுவாச உணர்வுதான் இன்று நமக்கும் தேவை. விசுவாசமும், விசுவாச அறிக்கைகளும் அடையமுடியாத் தூரத்திலுள்ள வண்ண ஜாலத் தாரைகள்போல வெறும் இறையிற் தத்துவங்களாக மட்டும் மின்னினாற் போதாது நடைமுறையில், பாதத்துக்குப் பாதை காட்டும் ஒளி விளக்காகவும் அமைந்தால் மட்டுமே அது வாழும் விசுவாசமாகும். அதுவே விவிலியம் கூறும், குறித்துக் காட்டும், கடைப்பிடிக்கக் கூறும் விசுவாசம் என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுவைக்கச் சில துளிகள்

## முதலில் பழசு

23ம் அருளப்பர் பிரான்ஸ் நாட்டில் வத்திக்கான் தூதுவராக இருந்த சமயத்தில் ஒரு தூதுவராலய விருந்தில் கலந்து கொண்டார். உணவு நேரம் நெருங்கியதும் ஒவ்வொருவராக உணவறைக்குச் செல்லத் துவங்கினார்கள். 23ம் அருளப்பருக்கு முன்னால் பிரான்ஸ் நாட்டின் யூதத் தலைமைக்குரு சென்று கொண்டிருந்தார். உணவறையின் கதவருகில் 23ம் அருளப்பர் முதலில் செல்லட்டுமே என்று யூத மதகுரு வழிவிட்டு ஒதுங்கி நின்றார். 23ம் அருளப்பர் சிரித்துக்கொண்டே யூத மதகுருவின் காதில் கிசுகிசுத்தாராம்.

ஏன் நிற்கிறீர்கள்? உங்களுக்குப் பிறகுதான் நான் வர வேண்டும். முதலில் பழைய ஏற்பாடு... பிறகுதான் புதிய ஏற்பாடு.

★

## திருத்தம்

வீரன் ஒரு முறைதான் சாவான். கோழை பல முறை சாவான் என்பார்கள். ஒரு திருத்தம். வீரன் சாவதே இல்லை. கோழை வாழ்வதே இல்லை.

கலைஞர் மு. கருணாநிதி.

## தலை தப்பியது

ஆபிரிக்கா கண்டத்துக்கு வேதம் போதிக்கச் சென்ற அருட்தந்தையை பழங்குடிகள் பிடித்து பக்குவமாய் பெயின்ட் அடித்து ஒரு புறம் உட்காரவைத்தனர். இன்னொரு புறம் நீர் கொதிக்கும் பிரமாண்டமான அண்டா. அங்கியைக் களைந்து அண்டாவில் தூக்கிப் போடுகிற கடைசி வினாடியில் அருட்தந்தை காட்டுமிராண்டிகளின் தலைவனை அழைத்தார். ''என்னைச் சமைக்கப் போவது பற்றிச் சந்தோசம். அதற்கு முன்னால் 'சாம்பிளாக' இதைக் கொஞ்சம் சாப்பிட்டுப் பார்'' என்று பக்கத்தில் கத்தி வாங்கி இடது காலிலிருந்து கொஞ்சம் வெட்டிக் கொடுத்தார். சாம்பிள் பார்த்த தலைவன் 'தூ' என்று துப்பினான். அருட்தந்தை பிழைத்தார். அதன் பிறகு அவர்களிடையே நெடுநாள் வாழ்ந்தார்.

(அருட்தந்தையின் இடதுகால் தன்கையால் செய்யப்பட்ட செயற்கைக் கால்)

— WEEKLY

★

## எது அரசியல்

தவறு செய்வது மனித இயல்பு. தவறை மன்னிப்பது தெய்வப் பண்பு. தவறை மற்றவர்கள் மேல் சுமத்துவது அரசியல்,

— டைஜஸ்ட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## இளைஞர் அரங்கம்

# எண்பதுகளின் இறுதியில் நாம்

எண்பதுகளில் இன்னுமொரு ஆண்டு எமக்கு விரைவாக வந்துவிட்டது.

ஆண்டு பிறக்கும் போதும் எத்தனை இழப்புக்கள் நிகழ்ந்துவிட்டன என்பதை நாம் அறிவோம்.

- கூக்குரல்கள்
- கொண்டாட்டங்கள்
- குண்டுச் சத்தங்கள்
- துப்பாக்கி வேட்டுக்கள்
- பயங்கர விபத்துக்கள்
- பல்வேறுபட்ட கொலைகள்

மத்தியில் இவ்வருடம் பிறந்துள்ளது. ஆண்டு பிறக்கும்போது இருந்த நிகழ்வுகள் தொடரும் ஆண்டிலாவது அருகிவிடுமா? மறைந்து விடுமா? தீர்ந்து விடுமா? அல்லது தொடருமா? என்பதுதான் இன்றைய கேள்விக்குறி.

- அனைத்து சமூகங்களிலும்
- அனைத்து சமயங்களிலும்
- அனைத்து அமைப்புக்களிலும்
- அனைத்து நாடுகளிலும்
- எல்லா விடயங்களிலும்

ஒதுக்கப்பட்ட, ஒதுங்கிய மக்கள் சிலர் இருக்கின்றனர், இவர்களின் வினாக்கள்தான் இவை.

உண்மை உறவாடல் — மனமாற்றம் இல்லையேல் இக்கேள்விக் குறிகளுக்கு விரைவான விளக்கம் — தீர்வு பெறமுடியா என்பதை நாம் உணர்ந்தவர்களே.

இருப்பினும் இவை மட்டில், அமைப்புக்களின் தலைவர்களை — அரசியல்வாதிகளை — சமயத் தலைவர்களை — சமூகவாதிகளை — நாட்டுத் தலைவர்களை — உலகத் தலைவர்களை நாம், அதாவது தொடர்புச் சாதனங்களைக் கையாள்வோர் எவ்வாறு இணைக்கலாம் என்பதை இவ் வருடத்தில் சிந்தித்து செயல்பட உங்களை அன்புடன் அழைப்பது —

**— கலையுலகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒன்று - இரண்டு, அல்பா - ஒமேகா

பறவைகளின் ஒலிகளே இல்லை. குண்டுச் சத்தங்களின் ஒலிகள் கேட்டபோது, முத்தையா விழித்துக்கொண்டார். ஆயுட் சிறைக் கைதியாக முத்தையா நகரின் சிறைச்சாலை ஒன்றில் தொடர்ச்சியாக 5 வருடங்களைக் கழித்துவிட்டார். தமது காலைக்கடன்களை முடித்து வந்தபோது தமது சுதந்திர வலயத்திற்குள் மூக்கும் முளியுமாக, கட்டை மயிருள்ள 25 வயது மதிக்கத்தக்க இளைஞன் சோர்ந்து கிடக்கக் கண்டார்.

முத்தையாவுக்கு 48 வயதாகின்றது. வாழ்க்கையில் 25% சிறையில் வாடியவர் — வாடுகிறார். ஊர்வலங்கள், போராட்டங்கள், வேலை நிறுத்தங்களுக்கு தலைமைதாங்கியே பழக்கப்பட்டவர். மாக்ஸியத்தை, லெனிசியத்தை, அடிக்கடி போதிப்பவர். சிறைக்கு வரும் - தம்முடன் தங்கும் அனைத்துப் பேருக்கும் போதனை வழங்கியே தமது சிறை வாழ்க்கையை மிக இனிமையாக்கியவர்.

முத்தையாவைக் கண்டதும், சாந்தன் விழித்து, வெருண்டு எழும்ப முயற்சித்தான். ஆனால் சாந்தனால் எழும்ப முடியவில்லை. முத்தையா ஓடிச்சென்று சாந்தனைப் பிடித்து இருத்தினார். சாந்தனின் உடலை, அவனது பார்வையை, பார்த்ததும் முத்தையாவுக்கு விளக்கம் அதிகம் தேவைப்படவில்லை.

எப்படி? அகப்பட்டே என்பதுபோல் தமது முகத்தை உயர்த்தி, தலையை அசைத்தார். சாந்தன் சில நிமிடங்கள் கழித்து, தம் மக்களையும், தமது இயக்கத்தையும், உறுப்பினர்களையும், நினைத்து வேதனையுடன் கூறத் தொடங்கினான்.

காட்டிக் கொடுத்திற்றாங்க... காசு வசூலிக்க ஓர் ஊருக்குள் போகும்போது, யாரோ அறிவிச்சிட்டாங்க. காசு வாங்கப்போன வீட்டில வைச்சே அமத்திட்டாங்க... என்றான்.

தம்பி, இலட்சியத்தை அடைய, கொள்கைகளை உண்மைகளை முதல்ல மக்களுக்கு சொல்லுங்க தம்பி. மக்களுக்கு என்ன நடக்குது என்றே தெரியல்ல. மக்களை மாத்துங்க — அவங்கட மனத்த மாத்துங்க — மக்கள் புரட்சியாக இது மாறாதவரை — இதில வெற்றியே இல்ல என்று கூறிமுடித்தார் முத்தையா.

பல்வேறுபட்ட வதைகள், விசாரணைகளின் பின் சாந்தன் ஒருவாறு விடுபட்டான். போகும்போது முத்தையாவிடம் வேதனையான ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுச் சென்றான். சாந்தன் சென்று 20 நாட்களாகிறது எதுவும் நல்லது செய்துகொண்டிருப்பான் என்று முத்தையா நினைத்தார்.

முத்தையாவுக்கு நாட்டில், குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் என்ன நடக்கின்றது என்பதை ஒவ்வொரு நாளும் புதினப் பத்திரிகையின் மூலம் அறிந்துகொண்டு இருந்தார். இரவு பல்வேறுபட்ட சிந்தனைகளுக்குப் பின் நித்திரைக்குச் சென்ற முத்தையா - விடியற்காலை கண்விழித்தபோது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

சாந்தனே தான்... 3 வாரங்கள்கூட ஆகவில்லை. மீண்டும் எவ்வாறு இங்கு வந்தான் என்று முத்தையா தம்முள் வினாக்களை அடுக்கிக் கொண்டிருக்கும் போதே சாந்தன் அலட்சியச் சிரிப்புடன் முத்தையாவுக்கு அண்மையில் அமர்ந்தான்.

என்ன ஊர்ப்புதினங்கள் எப்படி? வேலைத் திட்டங்கள் எப்படி? என்று முத்தையா வினாக்களைத் தொடர்ந்து கேட்டார்.

ஊர் மக்களை மாற்றச் சொன்னீர்கள் — அவர்களுக்கு எம் பாதையையே காட்டச் சொன்னீர்கள் — ஆறு, விடுதலை — சோசலிசம் என்று கூப்பாடு போடும் அடுத்த சாராருக்கு யாரு சொல்லுவது — அவங்களில் ஒருவன் தலையசைத்து விட்டான் ஐயா என்று சிரித்தான்.

பல்வேறுபட்ட விவாதங்கள், கருத்துப் பரிமாறல்களின் பின்னர் முத்தையா மீண்டும் சில கருத்துக்களை முன்வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலும் — மேலும் விசாரணைகள், வதைகளுக்குப்பின் நீதிமன்றத்தின் மூலம் சாந்தன் விடுவிக்கப்பட்டான்.

1983லிருந்து 1987 ஆடி வரையுள்ள நிலைமைகள் மாறிவிட்டன. இந்தியத் துருப்புக்களின் வருகை மேலும் வடக்கு, கிழக்கு மாகாணப் பிரச்சினைகளை கனமாக்கின அல்லது சிக்கலுடையதாக மாற்றின எனப் பலரும் விமர்சித்தனர்.

திட்டமிட்ட வருகை, ஊடுருவல், ஆக்கிரமிப்பு என்று எவ்வாறு நாம் கூறினாலும் அவர்களது நடவடிக்கைகளின் மட்டில் உள்ளூர் அரசு கூட பெலத்து பேசமுடியாத சூழ்நிலை உருவாகிவிட்டது என்பது உண்மைபோல் பல அழிவுகள், கொலைகள் நடைபெற்றுக்கொண்டு தான் இருந்தன.

முத்தையாவின் வாழ்க்கை அந்த சிறைக்குள்ளே கழிந்துகொண்டு இருந்தது.

முத்தையா நிமிர்ந்து வெளியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, சிறைக்கதவுகள் திறக்கப்பட்டன தாடி வளர்த்த ஒரு இளைஞனை உள்ளுக்கு தள்ளிவிட்டுச் சென்றனர். இளைஞன் எழுந்திருக்கவே முடியாமல் குப்புறப் படுத்திருந்தான். குருதி வழிந்துகொண்டிருந்தது. சில இடங்களில் குருதி கட்டியாக திரண்டிருந்தது.

முத்தையா முகத்தை திருப்பினார். ஆச்சரியத்துடன் மீண்டும் உற்றுப்பார்த்தார். அவருக்கே அதிசயம் தான் — சாந்தனேதான் — இவ்வளவு காலமாக உயிருடன் இருந்திருக்கிறான்தான் — என்ன நடந்ததோ? எப்படி அம்பிட்டானோ? என்று முத்தையா மீண்டும் தமது சிந்தனைக் குதிரையைத் தட்டிவிட்டார். அவருக்கு சில அனுமானங்கள் கிடைத்தபோதும் அவற்றை உறுதிப்படுத்த விரும்பினார். முதலில் சாந்தன் களைப்பாற உதவினார். குடிக்க தண்ணீர் கொடுத்தார். உடலைத்தடவி, துடைத்து விட்டார்.

சற்று நேரத்தின் பின்னர் சாந்தன் கண் விழித்து பார்த்தான். அதே முத்தையா ஐயா தான். அவரும் இன்னும் இதற்குள்ளேயே காலம் தள்ளுகிறார் என்று எண்ணிக்கொண்டே எழுந்து இருக்க முற்பட்டான். முத்தையா கைகொடுத்து உதவினார்.

முத்தையா எதுவுமேகேட்க விரும்பவில்லை. அவர் சாந்தனின் முகத்தையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார். சாந்தன் மிக நீண்ட நேர அமைதிக்குப்பின், எப்படி மீண்டும் வந்தேன் என்றுதானே கேட்கப்போறீங்க — எங்கட மக்களுக்கு விடிவே இல்லை ஐயா, ஒரவன் காட்டிக்கொடுத்தான், மற்றவன் (வேறு இயக்கம்) காட்டிக்கொடுத்தான், இப்பொழுது சார்ந்தவனே காட்டிக் கொடுத்துவிட்டான். முத்தையா விளங்காது மீண்டும் கேள்விக்குறியை முகத்தில் படம் போட்டார்.

— எஸ். லோகநாதன் —

சாந்தன் வரட்சியான சிரிப்புடன் — எங்கட இயக்கத்தவனே தேடிக் காட்டி கொடுத்து விட்டான் ஐயா என்றான்.

தம்மை இழப்பதற்கான மனப்பாங்கும், தத்துணிவும், உயரிய இலக்கும், நியாயபூர்வமான புரிந்துணர்வும், ஒருங்கிணைவும் இல்லையேல் நாம் எமது வேலைத்திட்டத்தில் உரிய விளைவினைப் பெறமுடியாது தம்பி. அதற்காக நாம் ஒளிந்து, ஒடிந்து போகவும் முடியாது. ஆக்கள் அழியலாம், அமைப்புக்கள் அழியாது தம்பி என்று முத்தையா பெருமூச்சு விட்டுக் கூறும்போது எங்கோ தொலைவில் ஒரு குண்டு வெடிக்கும் சத்தம் கேட்கிறது.

(யாவும் கற்பனையல்ல)

## வாழ்க்கையின் பாடம்

வாழ்க்கையின் தொடக்கம்
பிறப்பு !
வாழ்ந்திடும் போது
எத்தனை வகுப்பு !
எளியோராய் — மேலோராய்
இருந்திடும் பகுப்பு !
என்றைக்கும் ஒழியாதா
இதற்கேன் மறுப்பு !
தொடர்ந்திடும் வாழ்க்கையின்
தொகுப்பு ! தொடராதே...!
ஒருநாள் இருக்குதே இறப்பு !

ஜீ. எம். பரஞ்சோதி
தோப்பூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆற்றலின் ஊற்று - செபம்



முடிவின்மைக்குப் போகும் கரடுமுரடான குறுகிய பாதையில் நடக்க மிகுந்த பலம் தேவை நமது அலுவல்களில் ஏற்படும் இடைஞ்சல்களை மேற்கொள்ளப் போதிய ஆற்றல் தேவை. மேலும் கடவுள் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் வேலையை செய்ய வேண்டுமானால் தியாகங்கள் செய்யவேண்டும். தியாகங்கள் செய்ய ஆற்றல்கள் தேவை. இவ்வாற்றல் நமக்கு எங்கிருந்து கிடைக்கும்? வற்றாத ஊற்றாகிய செபம் நமக்கு ஆற்றல் அளிக்கும்.

நீங்கள் நம்மை மன்றாடித் திரும்ப வருவீர்கள். நீங்கள் நம்மை வேண்டுவீர்கள். நாம் உங்கள் மன்றாட்டை கேட்டருள்வோம்' (எரே. 29-12) சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து செபம் செய்யுங்கள். (மாற். 14-38) செபம் என்பது ஆன்மா வானுலகை நோக்கிப் பறக்க உதவும் இறக்கை. தியானம் என்பது கடவுளைக்காண உதவும் கண், என்று புனித அம்புறோஸ் கூறியிருக்கின்றார்.

செபம் பயனற்றது அன்று. நமது தெய்வீக மீட்பர் நமது செபங்களை கேட்பதாக வாக்குறுதி அளித்துள்ளார். ''நீங்கள் கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், ஏனெனில் கேட்கிற எவனும் பெற்றுக்கொள்வான்'' (லூக். 11 : 9-10). என்று அண்ணல் யேசுவே கூறியிருக்கிறார். செபம் இன்றியமையாதது. ஆன்மா இல்லாத உடம்பு எவ்வாறு உயிரற்றதோ அவ்வாறே செபம் செய்யாத ஆன்மா உயிரற்றது. இறைவனின் உதவியின்றி நமது ஆன்மாவை மீட்பதுகூடாத காரியம் நாம் கேட்காவிடில் இறைவன் தமது அருட்கொடைகளை அளிக்கவும் மாட்டார். பாவநிலையில் இருக்கும் பொழுதும், பாவத்தில் விழ ஏதுவான சறுவாயிலும், இறைவனின் நட்பில்நிலைத்திருக்கவும் செபம்இன்றியமையாதது.

நமது செபம் பலன் தரவேண்டுமானால் அதற்கு ஒருசில நிபந்தனைகள் உண்டு. நன்றாக செபிக்க, பணிவோடு செபிப்பது இன்றியமையாதது. ஏனெனில் ''இறைவன் ஆணவம் கொண்டவர்களை எதிர்த்து பணிவுள்ளோர்க்கே அருட்கொடைகளை அருள்கிறார்''. இரண்டாவது நம்பிக்கையுடன் மன்றாடவேண்டும். ''நீங்கள் செபிக்கும்போது கேட்பதையெல்லாம் பெறுவோம் என்று விசுவசியுங்கள், அவைகள் அனைத்தும் உங்களுக்கு கிடைக்கும்'' என்பது இயேசுவின் வாக்கு. செபம் என்பது நீண்ட வார்த்தைகளை சொல்வதல்ல ஆனால் உன் மனத்தை உற்று நோக்கும் ஆண்டவரின் மீது உன் எண்ணத்தை திருப்புவதே செபமாகும். நமது செபம் இறைவனிடம் மதிப்புப்பெற்று நமது ஆத்துமத்திற்கு பயனளிக்க பக்தியும், கவனமும் இரண்டும் முக்கிய நிபந்தனை.

எல்லாவற்றிற்கும் மேலாக விடாமுயற்சி அவசியம். ''விழிப்பாயிருந்து எல்லா நேரத்திலும் செபியுங்கள்'' என்று புனித சின்னப்பர் தமது நிருபங்களில் எழுதியிருக்கின்றார். கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறக்கப்படும்'' என்று இயேசுவும் சொன்னார் செபத்தில் கேட்ட அருட்கொடைகள் உடனே கிடைக்காவிடில் மன ஊக்கத்தை இழக்கவேண்டாம். அதிக நம்பிக்கையுடன் செபியுங்கள் இயேசுவின் இதயத்தை இடையறாது தட்டுங்கள் உங்கள் விடாமுயற்சிக்கு தக்க பலன் கிடைக்கும்.

காலைச்செபம் என்பது இறைவனின் இரத்தமும், ஆசீரும் நிறைந்த பொக்கிஷத்தை திறக்க உதவும் திறவுகோல். இறைவனின் புகலிடத்தில், காவலில் நம்மை வைக்க உதவுவது மாலைச் செபம், புனித கிறிஸோஸ்தோம் அருளப்பர் கூறுவதுபோல் ''செபம் அலகையின் தாக்குதல்களிலிருந்து தப்பித்துக்கொள்ள உதவும் ஒரு கருவி. எல்லா ஆபத்துக்களிலும் நமக்கு தற்காப்பு அளிக்க வல்லது''. நாம் புரியும் அலுவல்களை இறைவனை மகிழ்விப்பதற்கு மட்டுமே செய்வதனாலும், இடையிடையே நமது உள்ளத்தை அவர்பால் திருப்புவதாலும் எந்நேரமும் செபிக்கலாம் செபம் இன்றி நமது ஆன்மாவினால் நீடித்துவாழ இயலாது. செபமின்றி அலகையின் சோதனைகளை மேற்கொள்ளமுடியாது, புண்ணியங்களை பெறமுடியாது. பொருட் கொடையோ, அருட்கொடையோ எதுவும் ஆண்டவரிடமிருந்து பெறமுடியாது. நமது ஆன்மாவை மீட்கமுடியாது. இதை நாம் நன்கு மனத்தில் இருத்தவேண்டும் இங்ஙனம் நாம் இடையறாது செபித்தல் வேண்டும்.

— R. சாந்தினி ஜூலியானா கல்வியூர்.

# தமிழர் பெருநாள்

தைத்திருநாளாம் — எங்கள்
தமிழர் பெருநாளாம்
தமிழர் திருநாள் வந்தால்
தங்கையர்க்கு மண நாளாம்

வாசல் பெருக்கி — தங்கை
வகை வகையாய்க் கோலமிட
பூவால் அலங்கரித்து
பூஜையும் செய்கின்றோம்

புதுப்பானைச் சோறு
பொங்கி வழிகையிலே
பொங்கலோ பொங்கலென்று
போற்றுகின்றோம் தெய்வத்தை

ஆதவன் தலைதெரிய
அவனியில் ஒளிபிறக்க
மாத மும்மாரி பெய்ய
மானிடர் வாழ்வு உய்ய



உழவர் பெருநாளிது
ஊரவர்க்குத் திருநாள்
சிறியோரும் பெரியோரும்
சேர்ந்து மகிழும் நன்நாள்.

— இராஜகிரிய சந்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுகதை

# அந்தப் பாவம் எனக்கு

- யோகி -

முற்றத்தில் பூமரங்களைப்பார்த்துக்கொண்டிருந்த நான் மதில் பக்கம் நடந்து சென்று இரும்புக் கதவை திறந்துகொண்டு தெருவை உற்று நோக்குகின்றேன்.

தெருவில் ஒரு கோடிமுனையில் கையில் குழந்தையுடன் நடந்து வந்துகொண்டிருப்பது அவளே தான். பெயர் தெரியாத ஆனால் தெரிந்த முகம் அது. அனுதினமும் வராவிட்டாலும் இந்தத் தெருவினூடே அடிக்கடி நடை பயிலுபவள் அவள் தானே.

அவளைக் கண்டவுடன் இன்று என்னுடைய உள்ளம் இறுகிக்கொண்டு வருகின்றது. தொடர்ந்து எனது நண்பன் பிரகாசத்தின் வார்த்தைகள் இப்போது கூறியது போன்று காதுகளிலும் உள்ளத்திலும் எதிரொலிக்கின்றன.

பிரகாசம் கண்டனக் குரலில் கூறிய அந்த வார்த்தைகளுக்கு வயது ஒரு காரணமாக இருக்கலாம். ஆனாலும் இன்று கூறியது போன்று அந்த ஒரு காரணம் வேர் ஊன்றி வளர்ந்து பலனடைந்து விட்டது போன்று உறுதியாக என் காதுகளில் ஒலித்து உள்ளத்தை இறுக்கியது.

''அடே! அருள்ஜோதி உனக்கு பிழைக்கத் தெரியாதடா. தெருவில வாறபோறவ எல்லாம் கை நீட்டியதுடன் அள்ளிக் கொடுத்திடுவா. ஊரில பிச்சைச்கார சனம் கூடிப்போச்சு, உனக்கென்ன இந்தப்பணம் வானத்தில இருந்தா கிடைக்குது''— இது பிரகாசம்.

''இல்லப் பாரு பிரகாசம்... ஏதோ இல்லாத படியினால் தானே கேட்குதுகள்... நாம கொஞ்சம் வசதியோட இருக்கிறம்'' என்று என் குரல் இரக்க பான்மையில் இழுத்தது.

"என்ன பெரிசா வசதியோட வாழ்கிறு... உன்னைப் போல ஆட்கள் இருக்கிறபடியால்தான் இவள் கையில் குழந்தையோட வேலைவட்டி ஒன்றும் செய்யாம வீடுவீடாக ஏறித் திரியிறாள். நீ இண்டைக்கு 'இல்லை' என்று ஒரு சொல்லு சொல்லியிருந்தா அவள் நாளைக்கு எங்கயாவது கூலிவேலை தேடி இருப்பாளோ இல்லையோ. இவளைப்போல ஆக்களயெல்லாம் உன்னைப் போல ஆக்கள்தான் ஊக்குவிக்கிறது''.

பிரகாசம் அன்று கண்டித்த இவள் தான் — அந்த முகம் தெரிந்து பெயர் தெரியாத இவள்—இப்போ தெருக்கோடியில் வந்து கொண்டிருக்கின்றாள்.

வாரம் ஒன்றாகிவிட்டது இவளைக் கண்டு. எங்கெங்கெல்லாம் சென்று யார் யார் இடமெல்லாம் பிச்சை எடுத்தாளோ! இவ்வளவு நாட்களும் தெரியல்ல.

'எவ்வளவு தன் மானம் அற்ற சனங்கள் இந்த பிச்சைக்காரக் கூட்டம். ஒரு வேளை சோற்றுக்காக இல்லாதபொய் எல்லாம் கூறி; படியேறி காலில் விழுந்து; போதாக்குறைக்கு விபரம் தெரியாத குழந்தையையும் காட்டி... ஓ! இப்படி வாழ்கிறதைவிட செத்து இருக்கலாம்'- இறுகிய என் உள்ளத்தின் கூற்று.

பிரகாசம் கூறியது எவ்வளவு தூரம் நியாயமானது என்று என் உள்ளம் தாளம் போட்டது. ஏன்... என்னை சற்று கண்டிக்கவும் செய்தது. ''நீ காசு கொடுக்கிறபடியால் தான் இதுகள் பிச்சை எடுக்குதுகள். மானம் கெட்டு வாழுதுகள். நீ கண்டிப்பாக இல்லை என்று சொல்லியிருந்தால் நாளைக்கு வேலை செய்யப் போகுங்கள். கொடுக்கிற ஆள் இருக்க மட்டும் சோம்பேறிகள் கூச்சமில்லாமல் கையை நீட்டுங்கள். பின்பக்கம் மெலிஞ்சா குதிரையும் வைக்கோல் தின்னும் என்று அனுபவம் இல்லாமலே சொன்னாங்கள். கொஞ்சம் வயிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுருங்கினால் வேலைதேடி தானே போவா. வேலைவட்டி இந்த நாட்டில இன்னும் இல்லாமலா போயிற்றுது...''

உள்ளத்தில் கண்டிப்பு இவ்வாறு செபிக்க மனமும் இறுக்கமாக கதவுக்கு தாழ்பாள் போட்டுக்கொண்டது.

அந்நேரம் பார்த்துத்தான் அவள் — எனக்கு பெயர் தெரியாத ஆனால் முகம் நன்கு தெரிந்த அந்த அவள் — என் வீட்டு வாசல்படியில் நின்றாள். பழைய பல்லவிதான். "ஐயா! குழந்தைக்கு பால் இல்ல சாமி. பால் வாங்க ஏதாவது கொடுத்தா மட்டும் போதும்...

பல்லவி சரணங்களில் தொடருமுன் நான் முறிக்கின்றேன். பூட்டிய உள்ளமும் மனமும் முகத்தில் தெரிய வேண்டும் என்று முகத்தையும் சற்று கடுமையாக்கிக்கொண்டு கட்டைக் குரலில் வெடிக்கின்றேன்,

''நேரம்கெட்ட வேளையில என்னபிச்சை பகல்முழுக்கஊர் ஊரா எடுத்த பிச்சை போதாதென்று இந்த அந்தி வேளையிலயும் ஏன் கரைச்சல் படுத்திறு. இன்றைக்கு ஒன்றும் இல்ல, போயிற்று நாளைக்கு வா...''

'நாளைக்கு வா'- கொடுக்க மறுக்கும் மாந்தர் கூறும் அதே வார்த்தைகள்தான் என் வாயிலும் தெறிக்கின்றது. என் கடுமை தெரியாத அந்த குழந்தை அவள் கையில் துள்ளி நெளிந்து சிரிக்கின்றது,

''ஐயா! இண்டைக்கு மட்டும்... என்று தொடரப் போனவளை என்னுடைய காரமான வார்த்தைகளினால் வெட்டுகின்றேன்.

''நாளைக்கு என்று சொன்னது கேட்கலியா. நாளைக்கு என்றால் நாளைக்குத்தான் இண்டைக்கு வீட்டில ஒன்றும் இல்ல'' — கண்டிப்புடன் குரலும் காரமாகிறது.

இந்த பெரிய வீட்டின் சொந்தக்காரனாகிய நான் வீட்டில ஒன்றும் இல்ல என்றால் யார்தான் நம்புவார்கள். பிரகாசத்தின் அந்த வார்த்தைகள் அண்மையில் ஓங்காரமாக ஒலிக்கின்றன. அவை உண்மை உண்மை என்று அந்தப் பொல்லாத மனம் ஊளையிட்டு இயற்கையிலேயே இரக்கமான உள்ளத்தை கடுமைப் படுத்துகின்றது. இந்த ஒரு தடவையாவது நான் ஒன்றும் கொடாமல்விட்டு அவளை வேலை செய்யச் செய்ய வேண்டும். சமூகத்தை சீர்திருத்த உள்ள ஒரே வழி இதுதான் என்று பூட்டிய உள்ளம் வேறு கொக்கரிக்கின்றது.

'பால் வாங்க பணம் இல்லாவிட்டால் போய் வேலை ஒன்று தேடிக்கொள்ள வேண்டியது தானே' என்று சொல்ல வந்த வார்த்தைகள் எப்படியோ கொலை செய்யப்பட்டு 'யாரோ பிள்ளையைப் பெத்து போடுகிறது. நானா பால் வாங்கிக் கொடுக்கின்றது. அதுர



அப்பனிட்ட போய்க் கேளு பாலுக்கு காசு'' என்று பேய் போல கத்திவிட்டு என்னுடைய உள்ளம் இனி திறவாது என்று காட்டுவதுபோல வீட்டின் பெரிய இரும்புக்கதவை இழுத்து மூடுகின்றேன்.

குனிந்த முகத்துடன் அவள் தெருவில் இறங்கி நடக்கின்றாள். அவள் முகம் எனக்குத் தெரியவில்லை. அவள் உள்ளத்தில் ஓடிய எண்ணங்களும் அதனால் எனக்கு தெரிந்து இருக்க நியாயம் இல்லை. அந்த குழந்தை - விபரம் புரியாதது. நெளிந்து துள்ளி என்னை நோக்கி வழமைபோல கையாட்டுகின்றது. அந்த பிஞ்சு குழந்தையின் பூ முகத்தில் என்னுடைய கடுமையும் மறுப்பும் பாதிப்பை ஏற்படுத்தியதாக தெரியவில்லை. அந்த முகம் தெரிந்து பெயர் தெரியாத குழந்தைக்கு கையாட்ட வேண்டும் போல தோன்றினாலும் அது எனக்கு பெரிய சங்கடமாகியது.

நானும் துணிச்சல் காரன் தான். எனக்கும் சமூகத்தை கண்டிக்கத் தெரியும் என்று கூறி தோளில் தட்ட வேண்டும் போல தோன்றுகின்றது. பிரகாசம் கிட்ட நின்று தட்டிக்

உனது மனதில் மாறாத வடுக்களை ஏற்படுத்துவது உனது எண்ணங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொடுப்பது போன்ற ஓர் உணர்வும்கூட. உடம்பு ஒரு மாதிரியாகப் புல்லரித்தது.

எல்லாம் ஒரு விநாடிதான். நெஞ்சின் ஆழத்தில் மனச்சாட்சியின் குரல் தண்ணீரில் மூழ்கி மரணமாகிறவனின் க்டைசி மூச்சுப்போல திணறி குளறி வெளிப்படப்பார்க்கிறது.

என்ன கல்நெஞ்சம் எனக்கு, எப்படி இது என்னால் கைகூடியது. போயும் போயும் ஓர் ஐந்து ரூபா காசுக்காக என்னுடைய வாழ்நாளில் காட்டிய நல்ல பண்புகள் யாவற்றையும் ஒரு விநாடியில் என் கைகளினாலேயே கழுத்தை நெரித்து கொன்றது போன்ற ஓர் ஏக்கப் பெருமூச்சு — மனச்சாட்சியின் சுடுமூச்சு நெஞ்சை உடைத்துக் கொண்டு வெளியேறியது. எவ்வளவு இறுக்கமாக உள்ளக் கதவுக்கு தாழ் இட்டேனோ அவ்வளவு பெரிதாக விளைந்தது அதன் உடைவு,

மனச்சாட்சியே அப்படித்தான். சொற்ப நேரத்திற்கு பூட்டிவைத்து விடலாம்; சத்தியத்தை குழிதோண்டிப் புதைக்க முடியாதே. அதுபோலத்தான் இந்த மனச்சாட்சியும்... பிஞ்சுக் கரங்களை ஆட்டிக்கொண்டு விபரம் தெரியாது மறுவலித்த அந்த குழந்தையின் முகம்... தலை குனிந்து என் வீட்டுப்படியை விட்டகன்ற அந்த பெயர் தெரியாத முகம் தெரிந்த — அவள்... அவள் முகம் — ஏமாற்றம், ஏக்கம், பரிதாபம், இயலாமை என் மனச்சாட்சியாக இப்போது என்னை நோக்குகின்றது.

சற்று முன்பு பத்திரகாளி போன்று கூப்பாடு போட்ட நான், என் மனச்சாட்சியின் உலுக்கலில் பழையபடி அருள் ஜோதியானேன். அவளை அழைத்து ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற உந்தலில் ஓடிச்சென்று வீட்டின் வாயியின் இரும்புக் கதவை திறக்கின்றேன்.

சில சூழ்நிலைகளில் விநாடிகள்கூட நீண்ட காலங்களாகப் போய் விடுகின்றன அதில் இதுவும்ஒன்று அவள் அந்த தெருக் கோடிமுனையில் மறைந்து விட்டாள் - மறைந்தே விட்டாள்.

'யாரிடமாவது எதையும் பெற்றுக்கொள்வாள். மனிதர்களா இல்லை இந்த உலகில்' என்று மனச்சாட்சியை சமாதானம் செய்ய முயல்கின்றேன் கேட்டால் தானே. உள்ளத்தின் புழுக்கம், அத்துடன் அந்தி வெயிலின் உடல் புழுக்கம் வேறு. இரண்டுக்கும் ஆறுதல் தர எண்ணி எனது மாடி வீட்டின் பலகணியை அடைந்து அங்கிருந்து நூறு யார் தூரத்தில் தெரியும் கடற்கரையை உற்று நோக்குகின்றேன்.

ஓயாது முட்டி மோதும் அந்த அலைகளைக் கண்டது, தடம்புரண்டு தத்தளித்த என் உள்ளத்திற்கு தோழமை கிடைத்தது போன்ற ஓர் உணர்வு. அத்துடன் உடலை தொட்டுத் தழுவும் அந்த இளம் காற்று சூடேறிய மேனியை குளிர்வித்தது.

இயற்கையின் தோழமையில் எவ்வளவு தூரம் லயித்

## விலை உயர்வு !

வாசக நேயர்களே :

தொண்டன் சஞ்சிகையின் விலை நான்கு ரூபா ஐம்பது சதமாக (4/50) உயர்ந்துள்ளது. இது நாம் விரும்பாமல் செய்த தவிர்க்க முடியாத செயல்.

கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட அச்சுத்தாள், அச்சுக்கூலி ஏற்றங்களும், தபாற் செலவு அதிகரிப்பும் தாங்கமுடியாச் சுமைகளாக தொண்டனை அமுத்திக்கொண்டே இருக்கின்றன. இப்பாரிய பழுவை முற்றாக அகற்ற அல்ல, சிறிது குறைக்கவே இந்த விலையதிகரிப்பு.

தொண்டனில் பணி தொடரவும், வளரவும், இச்சிறிய விலை அதிகரிப்பை வாசகர்கள் பொருட்படுத்தாது கிழக்கிலங்கையில் வெளியாகும் ஒரேயொரு கிறிஸ்தவ இலக்கிய சஞ்சிகையான தொண்டனுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நிர்வாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தேனே தெரியவில்லை. அந்தி வேளையில் யாருமற்று வெறிச்சோடிய அந்த கடற்கரையில் இரண்டு உருவங்கள் நடந்து வந்து கொண்டிருக்கின்றன. இயற்கையுடன் நான் கொண்டிருந்த பிரத்தியேக உறவை குலைப்பது போன்று அந்த இரண்டு உருவங்களும் என் கண் அடையாள தூரத்தினுள் நுழைகின்றன.

அது... அது... கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்க்கின்றேன். இடுப்பில் குழந்தையுடன் நடப்பது அவளேதான். அந்த பெயர் தெரியாத முகம் தெரிந்த அவளே தான். யார் அந்த 'அவன்' என்று என்னுடைய உள்ளம் கேள்விக்குறியாக வளைந்து தொங்குகின்றது பெயர் முகம் தெரியாத அந்த ஆசாமியுடன் அவள்... அவள்...கடற்கரையின் தாழம் புதரின் பின்னால் மறைகின்றார்கள், இரண்டு உருவங்கள் கோடுகள் போல காற்றில் அசையும் தாழம் இலைகளுடன் உருண்டு புரள்வது இலேசாக அந்தி வேளை வெளிச்சத்தில் தெரிகின்றது.

சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும் நான் செய்த செயலையோ அல்லது அந்த தாழம்புதரின்பின்னால் அழிந்து கொண்டிருக்கும் தாய்மையையோ காண நாணியவன் போன்று அந்தி கதிரவன் தலை கவிழ்ந்து மறைகின்றான். பாலுக்காக தாய்மை உருக்குலைவதை புரிந்து கொள்ள முடியாத விபரம் தெரியாத அந்த குழந்தை கடற்கரை மண்ணில் மண் வீடு கட்டிச் சிரிக்கிறது. அதை கொந்தளித்து சிதறும் அலைகள் உடைந்து அழிக்கின்றன. இயலாமையினால், மறுப்பில், சுயநலத்தில், வறுமையில் கட்டப்படும் சமூகங்கள் இந்த உடைந்துகொண்டிருக்கும் அத்திவாரமற்ற மண் வீடுகள் தானே.

'மானங்கெட்டவள்...' என்று கூறவந்த என் நாவின் நுனியை மனச்சாட்சியின் கரம் இழுத்து அடக்கியது.

சற்றுமுன்பு நான்கூறிய 'இல்லை' என்ற வார்த்தை மனித உருக்கொண்டு தன் சுயநலத்தில் ஓர் பெண்மையை அதன் தாய்மையை உருக்குலைப்பது இன்னும் இலேசாக தாழம் புதரினூடாக தெரிகிறது. என் சுயநலம், என் மறுப்பு அங்கு புரியும் பாவத்தை என் கண்முன் நான் காண்கின்றேன். என் வாழ்க்கையில் நான் கட்டிய அத்தனை பண்புகளும் தவிடுபொடியாகி இந்த ஒரு சுயநலத்தில் கரைகின்றது. இதயம் பெரிதாக 'பாவம்' என்று ஓலமிடுகிறது.

மேற்கொண்டு காண சகியாமல் இதயம் உடைந்து அமர்கின்றேன். மீண்டும் 'பாவம்' என்று என் வாய் முணுமுணுக்கிறது. அது இதயத்தின் அழுகுரல் - அதன் பிரதிபலிப்பாக என் கண்களில் சுடச்சுட இரண்டு சொட்டு கண்ணீர் கசிகின்றது.

## விண்ணக வாழ்வில் ஈராண்டு நிறைவு

# திரு. S. S. அந்தோனிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்)



பிறப்பு: 14-09-1918 இறப்பு: 25-01-1986

நித்திய வாழ்வில் பங்கேற்க
நிமலன் சந்நிதி சென்றடைந்த
முற்றிய அன்பே! முழு நிலவே!
முழுமனதோடு இறைஞ்சுகின்றோம்
அமைதியில் ஆற வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கை எரியும் நாடா!

அநுமன்வால் தீகொண்டு
அழித்தநாடு - மீண்டும்
இனவெறியர் மூட்டியதீ
எரித்தநாடு! - இன்று
எமதயலார் படையெடுப்பால்
எரியலாமா! - இங்கே
எவர்பெண்ணை எவர்சிறையில்
இழுத்துவைத்தார்?


வடிவழகி சீதை கண்ணீர்
வடித்தபூமி! - மீண்டும்
குடிகலைந்த தமிழர்கண்ணீர்
குடித்தபூமி! - இன்று
உரிமைபெறத் தமிழர்கண்ணீர்
ஓடும்பூமி - என்றும்
வழிவழியாய் கண்ணீர்தான்
வழியலாமோ!

மக்கள்துயர் மாறுதற்கோர்
மார்க்கமுண்டா! - எட்டுத்
திக்கினிலும் ஈழமண்ணில்
ஏற்றமுண்டா! - என்றும்
துக்கவீடாய் வடகிழக்கு
துடிக்கலாமா! - தமிழர்
பக்கத்தில் சமாதானப்
புறு வராதா!

செ. குணரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சத்தோலிக்க திருச்சபையும் சமகாலப் பிரச்சினைகளும்

## ஓர் ஆய்வுரைக் கண்ணோட்டம்

— ஆனந்தா A. G. இராஜேந்திரம் —

### 2. சமாதானமும், பாப்பாசரும் (திருச்சபையும்)

உலகம் இன்று சமாதானம் இழந்து தவிக்கிறது. உலகநாடுகள் பலவற்றினதும் பொறுப்பற்ற போக்குகளின் காரணமாக மக்கள் இன்று அமைதி இழந்து தவிக்கின்றனர். அதன் வரலாறு அறியவந்த காலம் முதல் எத்தனையோ போர்களையும், இழப்புகளையும், துன்பங்களையும் கண்டு துவண்டு இன்றைய நிலைக்கு உலகம் வந்திருக்கிறது.

இரு பெரும் உலகப் போர்களைச் சந்தித்த அனுபவம் அதற்கு இருந்ததனால், அதிலும், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் நாசகார விளைவுகளைக் கண்ணாரக் கண்டு அதன் பாதிப்புகளைத் தலைமுறைகளுக்கு அனுபவிக்கும் பயங்கரத்தை உணர்ந்து 1945ம் ஆண்டிலே ஐக்கிய நாடுகள் மன்றம் உருவாக்கப்பட்டது. 50 நாடுகளின் பிரதிநிதிகள் அன்று கூடி இன்னுமொரு உலகயுத்தம் ஏற்படாமலும். எந்தவொரு நாடுமே அதற்கான சூழலை உருவாக்கித் தந்துவிடாமல் பார்த்துக் கொள்ளவும், நாடுகளில் ஒரு பொதுவான நிலைமையை உருவாக்கவும் ஐக்கிய நாடுகள் சபையை வடிவமைத்தார்கள். அதன் செயற்பாடுகள், "கட்டமைப்பெல்லாம் எமது ஆராய்வுக்குத் தேவையற்றவை.

ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்ட பின்னரும் நடந்தவை, நடப்பவை என்ன?

1945 இலிருந்து இன்றுவரையிலான 40, 41 ஆண்டுகளில் 71 நாடுகள் சம்மந்தப்பட்ட 154 போர்கள் இடம்பெற்றிருக்கின்றன இதில் இரு கோடிக்கும் அதிகமான மக்கள் மாண்டிருக்கின்றனர். இன்று கூட ஈரான்—ஈராக் போரானது முடிவில்லாத் தொடர் கதையாக நீளுகின்றதில்லை! இது தவிர உள்நாட்டு நெருக்கடி மிக்க அப்கானிஸ்தான் — பாகிஸ்தான் எல்லைச் சம்பவங்கள், இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பதட்டங்கள் உயிர் இழப்பை வளர்த்துக்கொண்டிருக்கின்றன.

உண்மை நிலை என்னவென்று சற்று ஆழமாகப் பார்க்கும் பொழுது ஐக்கிய நாடுகள் மன்றம் உருவானபின்னர் உலகின் ஈடிணையற்ற வல்லரசுகளாகத் தம்மை அமெரிக்காவும், சோவியத் நாடும் உருவாக்கிக் கொண்டன என்பதும் இவையொட்டி நாடுகள் பலவும் தமது வளர்ச்சி, பாதுகாப்பு, சில சமயம் அதை அன்னோரின் சுய ஆசைகளை வளர்த்தல் ஆகியவற்றின் பொருட்டு தமக்குச் சாதகமான ஒரு நாட்டை அணிசேரலாயின என்பதும் தெரியவரும். இதனால் மண்டலச் சார்பு தோன்றியது. மேற்கத்திய அணி என்றும் கிழக்கத்திய அணி என்றும் உருவாகின. இதே சமயம் வல்லரசுகளாலும், காலப்போக்கில் வளர்ச்சியடைந்த நாடுகளாலும், தாம் பல வழிகளிலும் சுரண்டப்படுவதைக் கண்ட சிறிய நாடுகள் பல விழித்துக் கொண்டன இதனால் மூன்றாம் மண்டல அணியான அணிசேரா நாடுகள் இயக்கம் பிறந்தது.

தமது வல்லமையை நிலைநாட்ட முற்பட்ட வல்லரசுகள் விண்வெளி ஆயுதம் உற்பத்தி செய்கின்ற அளவுக்குத் தம்மை வேகமாக வளர்த்து வந்தன. அதிலேற்பட்ட வளர்ச்சி (எவ்வளவு குறுகிய காலத்தினுள் எவ்வளவு பெரிய அழிவை உருவாக்கலாம் என்பதுதான் இந்த வளர்ச்சி காரணமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏலவே உற்பத்தியான சிறுரக ஆயுதங்கள் அவற்றிற்கு அவசியம் குறைந்தனவாயின இவற்றின் உற்பத்தியைத் தடுப்பதனால், வேலை வாய்ப்பைக் குறைக்காமல், அதேவேளையில் பணத்தைச் சம்பாதித்துக்கொள்ள நல்ல வாய்ப்பும் அவைகளுக்கிருந்தன. இவற்றைச் சந்தைப்படுத்தும் தளமாக மூன்றாம் மண்டல நாடுகள் அமைந்தன. அணிசேரா நாடுகளோ அடிக்கடி தமக்குள் மோதிக் கொள்ளும் அளப் பரிய ஆற்றல் கொண்டன. இதனால் இம் மோதல்களுக்குத் தீனியாக ஆயுதங்கள் வல் லரசுகளிடமிருந்து கொள்வனவாகின. நாட்டு வளங்களெல்லாம் பாதுகாப்பு, பாதுகாப்பு என்று பாழ்பட்டுப் போயின. மக்கள் வாழ்வு சீரழிந்தது அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப் பட்டன, புறக்கணிக்கப்பட்டன அன்றேல்அரை குறையாக நிறைவேற்றப்பட்டன. திட்ட மிடாத செயற்பாடுகளின் காரணமாகவும், தூரநோக்கற்ற திட்டமிடல் காரணமாகவும் அபிவிருத்தி என்ற பெயரில் நாடுகள் தம் இயற்கை வளத்தை அழித்தன இதனால் இயற்கை பொய்த்தது. பஞ்சமும், பசியும், பிணியும் மக்களின் நாளந்த வாழ்வாக மாறின. இலட்சக் கணக்கான மக்கள் உணவின்றி மடி கின்ற பரிதாபம் ஆபிரிக்க நாடுகள் பலவற் றிலும் இன்று நிலவுகிறது. அஸ்வான் அணை மூலம் சாதனை கண்டதாக எகிப்து இறுமாப் படையலாம், ஆனால் நைல் நதியை நம்பிய நாடுகளின் மக்கள் நலிவுற்று வாடும் அவ லத்தை மறுக்க முடியாது.

துன்பத்தில் மடியும் மக்களின் துயர் துடைக்கும் பணி புறக்கணிக்கப்பட்ட நிலையில் யார் பெரியவன், யார் வல்லவன் என்ற போட்டி மனோபாங்கு நாடுகளிடையே வளர்ந் ததால் சமாதானம் தொலைந்தது. நாடுகள் பல தசாப்தங்களாகப் பிளவுண்ட நிலையில் தமக்குள்ளே அமைதியற்றுத் தவிக்கின்ற நிலை. மேற்கு - கிழக்காக ஜெர்மன் தேசமும் வடக் குத் தெற்காக கொரியாவும், லெபனானும், துருக்கி - சைப்ரஸ் நாடுகளும் பிளவுபட்டு நிற்கும் அவலம் இன்றும் தொடருகின்றது. இப்படியாகப் பல வரலாறுகள் அதனிடையே சுமார் அறுபதாம் ஆண்டுகளிலிருந்து உலக அரங்கின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்துள்ள பயங்கரவாதம்.

நாடெல்லாம், உலகெல்லாம் சல்லாடும் இப்பயங்கரவாதம் பற்றி மிகச் சுருக்கமாக எடுத்து ஆய்வது நல்லது. உலகில் பல திறப் பட்ட வாதங்கள், சனநாயகவாதம், பொது வுடமை வாதம், சோசலிச வாதம். இப்படி யான வாதங்களின் மூலம் தமது கருத்தை விளக்கி நிற்பவர்களைச் சனநாயகவாதி, பொது வுடமைவாதி. சோசலிசவாதி என்று பெய ரிடுவர்கள். இவையெல்லாவற்றையும் விட மோசமானதாகக் கருதப்படுவதுதான் பயங் கரவாதமும், அதன்மூலம் தம்மைப் புலப் படுத்தும் பயங்கரவாதிகளும். இவ்வாதம் எந்த உண்மையை அடிப்படையாகக் கொள் கிறது? ''அடி உதவுமாப்போல் அண்ணன் தம்பி உதவான்? என்பதையே இது எப்படி உருவாகிறதென்றால், ஒரு குறிப்பிட்ட மக் களோ, இனமோ, வகுப்போ, பிரிவோ, எதுவோ தமக்கு ஏற்படும் பாதிப்புக்களை, அப்பாதிப்புக்களை ஏற்படுத்துபவர்களுக்கும், அவ்வாறு பாதிக்கிறவர்களுக்கு ஆதரவு கொடுப்பவர்களுக்கு எடுத்துக் கூறும். பாதிக் கிறவர்கள் இதைச் செவிமடுக்க மறுக்கும் போது, சத்தியாக்கிரகம், பொதுமேடை பிரச் சாரம் என்ற வழிகளில் எல்லாம் பாதிப்புக் குள்ளானவர்கள் தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துவார்கள். இதுவும் தவறினால் சிறுசிறு போராட்டங்கள் மூலம் பேசமுற்படு வார்கள். இதுவும் பாதிக்கிறவர்களை எட்டா மல்போனால், போராட்டம் தீவிரமாகும் இப் போதுதான் பாதித்தவர்கள் விழித்துப் பார்ப் பார்கள் பார்ப்பதோடு நின்றுவிடாது பாதிக் கப்பட்டவர்களின் கருத்தை அமுக்கிவிடு வதற்கு பகிரதப்பிரயத்தனம் செய்வார்கள் கைது செய்யும் சிறையில் அடைக்கும், அடித்து நொறுக்கும். இது எல்லாம் பாதிக் கப்பட்டவர்களின் மனதை வேதனைக்குள் ளாக்கி, விரக்திக்குத் தள்ளும். அந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுள் வாழும் இளந்தலை முறை தனக்கே உரித்தான தியாகம், வீரம், ஆகிய உணர்வுடன் கிளர்ந்தெழும், அதுவரை கைக்கொண்டமுறைகள் சரிவரவில்லையென்றால் புதியமுறைகளைக் கைக்கொள்ளும். இதில் ஆயுதம் ஏந்தி பாதிப்பவனுக்குச் சமனான பலத்தைக் கைக்கொள்ளும் முறை இறுதியா னதாக இருக்கும். இதில் பல்லுக்குப் பல் தத்துவம் தொடரும். பாதிப்பவன் பக்கம் போதிய வசதி வாய்ப்பிருந்தால் உலகறியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தெரியும்படி அலறுவான் இதோ பயங்கர வாதம் என்பான் பாதிக்கப்பட்டவனுக்கும் இதே வாய்ப்பு இருந்தால் அவனும் இதோ கொல்கிறான் என்று உலகறிய எடுத்துக் கூறு வான். இப்படியாக ஆளையாள் கழுத்தைப் பிடித்து நெரித்துச் சாகும் கட்டம்வரை ஆதரவு கொடுப்பவன் கொடுத்துக் கொண் டேயிருப்பான். முன்னும் பின்னும் போக முடியாத நிலை (Deadlock) ஏற்படும்போதும், பாதித்தவன் பக்கம் கைவிழும்போதும் சமா தானம் பேசு, பேசித் தீரு என்பான். ஆக பயங்கரவாதம் பலனுள்ள வாதம் என்றபடிக்கு வேகமாக நாடுகளெல்லாம் பரவும்படி ஊக்கம் பெற வளர்த்துவிட்டவர்கள், பயங்கரவாதத் தைப் பிரசவித்தவர்கள் யார் என்று இப் போது புரியும் என்பது எனது நம்பிக்கை ஒவ்வொரு அகிம்சைக் குரலுக்கும் உரிய மதிப்பு வழங்கும்போது நிலைமை ஒழுங்காக இருக்கும். எங்கு அகிம்சை புறக்கணிக்கப்படு கிறதோ அங்கு இம்சை - வன்செயல் - பயங் கரவாதம் தொடங்கும். அமைதியும் சமாதா னமும் தொலையும். பயங்கரவாதி என்று ஒரு விரலைச்சுட்டிக் காட்டுபவன் அந்தப் பயங்கர வாதியை விட நாலுமடங்கு பயங்கரவாதி என்று அவனுடைய மற்றைய விரல்கள் காட்டி நிற்பது ஒரு தெளிவான உண்மை.

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை பலஸ்தீனம், இந்தியா, ஆப்கானிஸ்தான், இலங்கை, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து எங் கனுமே இதே பயங்கரவாதம் எனும் ஓலம் தான். அடிக்கவும் உதைக்கவும் தான் கவனமே யொழிய அடிப்படைப் பிரச்சினையைத்தீர்க்கும் எண்ணம் அறவேயில்லாச் சூழ் நிலைகள் நிறைய சமாதானம் நிலைக்குமா?

சமாதனமற்ற உலகிற்குச் சமாதானம் கிட்டுமா? அந்தச் சமாதானத்தை உலகிற்கு வழங்குவது யார்? என்ற கேள்வியை யாரிடம் எழுப்பினாலுஞ்சரி தெய்வத்தை மாட்டி வைக் கும் விடையே எங்கும் கிடைக்கும். ஆம், அதுதான் உண்மையும் கூட. இறைவழிகாட் டுதலை விட்டால் சமாதானம் இம்மண்ணில் உயிர்பிழைக்க வழியில்லை என்பது தான் சரி யான நிலையும் கூட!

இவ்வழிகாட்டுதலை எங்கு எப்படிப் பெறுவது என்று சிந்திப்பது நாம் மட்டுமல்ல ஏலவே பல நாடுகளினதும் தலைவர்கள். தலைமைப் பீடங்கள் இவ்வாறு சிந்திக்கத் தொடங்கிவிட்டன! 'பெரிய' நாடுகளின் போக்குகளை நன்குணர்ந்தவைகளாக, இதன் எதிர்காலப் பாதிப்புக்களின் பயங்கரத்தைப் புரிந்தவைகளாக இவை செயற்பட முற்பட்டு விட்டன இன்று உரிய வழிகாட்டுதல் வேண்டி அவை நிற்கின்றன!

இத்தகையதொரு வழிகாட்டுதல் தனி மனித ஆளுமையினின்று மட்டுமே உருவாகி வரமுடியாது. அது ஒருமித்த பல சக்திகளின் கூட்டாகச் சற்று வித்தியாசம் கொண்ட மூல கத்தினின்றே வரமுடியும். இது எப்படி என் றால், ஒரு காந்தி ஒரு இந்தியாவிற்கே போதும் இரு வேறு நாடுகளுக்குப் போதாது. ஒவ் வொரு நாட்டினதும் சூழ்நிலை, அமைப்பு, கலாசாரம், பிரச்சினைகள், சமூகங்கள், சிந் தனைகள் வேறு வேறானவை, இந்திய சிந்தனை போலந்தில் வாழ முடியாது. அது அங்கு அறிமுகமாகவே பல ஆண்டுகள் பிடிக்கும் பிறந்த மண்ணிலே காந்தியம் தேடிப் பொறுக்க வேண்டிய நிலை.

ஓர் ஆயர் டுட்டு தென் ஆபிரிக் காவுக்கு மட்டுமே போதுமானவராக இருக் கலாம்; நைஜீரியாவையும் சேர்த்து அவரது கொள்கைகள் செயற்படுவது கடினம்.

(தொடரும்)

செத்தாலும் உன்னை விட மாட்டேன் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் நாம் செத்தபிறகு நம்மை அவர்கள் தொடக்கூட முன் வருவதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# என்று தணியும் இந்த...

**எங்களைக் காப்பாற்றுவார் இல்லையா?**

**எங்களுக்கு விடிவே இல்லையா?**




இது இலங்கைத் தமிழ் மக்களின் அவலக்குரல்.

அமைதிகாக்க வந்தோரும், போராளிகளும் ஈடுபட்டிருக்கும் முடிவில்லாத யுத்தத்தால் பாதிக்கப்பட்டுப் பரிதவித்து நிற்போர் அப்பாவித் தமிழ் மக்களே!

போராளிகளை ஒடுக்கியே தீருவது என்று இந்தியா வரிந்து கட்டிநிற்கிறது.

தமிழர்களது போராட்டத்தை இந்தியாவைக் கொண்டே அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதில் இலங்கை அரசு திட்டமிட்டு தொடர்ந்து செயலாற்றி வருகிறது. அது மட்டுமன்று. எதிர்காலத்திலும் இலங்கைத் தமிழரது போராட்டங்களுக்கு இந்தியா துணைபோகக் கூடாது என்பதைக் கவனத்திற்கொண்டு நீண்டகால பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதிலும் இலங்கை அரசு ஆர்வம் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

அகேவேளை இயலாவிட்டாலும் எதிர்த்தே தீருவோம் என்று போராளிகளும் அவ்வப்போது மோதிக்கொண்டிருக்கிறார்கள்.

விளைவு, அழிவு... அழிவு... அழிவு... இந்த அழிவை நிறுத்தும் மந்திரக்கோல் எங்குள்ளது என்று யாருக்கும் தெரியவில்லை என மழுப்பி விட முடியாது. தெரிந்தவர்கள் விரும்பாமையினால் தெரியாதவர்கள்போல் நடிக்கிறார்கள். அடுத்தவரைக் குற்றஞ்சாட்டியே அரசியல் நடத்துகிறார்கள்.

அனைவரையும் அடக்கி, ஆற்றுப்படுத்தி அமைதியைக் கொண்டுவரும் ஆற்றல் இந்தியாவுக்கே உண்டு.

போராளிகளை அடக்குவதில் இந்திய அரசு காட்டும் ஆர்வத்தை நீதியான ஒரு தீர்வை உருவாக்கி அதை நடைமுறைப் படுத்துவதிலும் காட்டவேண்டும்.

சட்டாம்பித்தனத்தை எளியவர்கள் பால் காட்டுவதை விடுத்து. ஏற்புடைய தீர்வை எல்லோரையுமே ஏற்கவைப்பதிலும் காட்ட வேண்டும்.

தனது பிராந்திய நலன்களை மட்டுமே கருத்திற் கொண்டு ஒரு சிறுபான்மை இனத்தின் இறைமையை, உரிமையை, பாதுகாப்பை மிதித்தால் அதை வரலாறு என்றுமே மன்னிக்காது.

தமிழ்ப் போராளிகளும் போராட்டத்தின் நடைமுறை விளைவுகளை, இனத்துக்கு ஏற்படும் பாரிய அழிவுகளைக் கருத்திற்கொண்டு கத்தியைத் தீட்டுவதைக் குறைத்து புத்தியைத் தீட்ட முன்வரவேண்டும்.

ஆயுதப் போருக்கு ஒரு வாயில் எனில் அறிவுப் போருக்கு பல வாயில்கள் உண்டு.

இதிலும் வீரம் உண்டு! வெற்றியும் உண்டு!

வேங்கைகளே! சிந்தியுங்கள்!

மலர்வேந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயம் வெளியீட்டு விழா 23-01-88

❋ நல்ல காலம் வருகுது - எழுத்தாளனுக்கு நல்ல காலம் வருகுது. பொங்கலுடன் நமக்கு நல்ல காலம் வருகுது..

O என்னடா மனே இது... பாட்டும் நடையும் ஒரு மாதிரியா கிடக்கு. சண்டையில வெண்ட ராசா மாதிரி வெத்தி நடை போட்டு வாரு...

❋ ஓம் மாஸ்டர்... வெத்திதான். பொங்கலோட நமக்கு புதுப்பரிசு ஒண்டு கிடைச்சிருக்கு...

O ஓ... நீ எழுத்தாளன் எலுவா... ஏண்டா மனே... உண்ட கதைக்கு பரிசு ஏதும் கிடைச்சிருக்கா...

❋ அதில்ல மாஸ்டர்... இனிமேல் அஞ்சு சதம் செலவில்லாம நம்மட புத்தகமெல்லாம் வெளிவரப்போகுது.

O என்னடா மனே நீ கதைக்கிரு...

❋ அது மட்டுமில்ல, அஞ்சுசதம் செலவழிக்காம அந்தப் புத்தகத்த நீங்களும் வாங்கிப் படிக்கலாம்.

O இஞ்ச... இஞ்ச... கொஞ்சம் கிட்டவா பாப்பம்... உனக்கு ஒண்டும் இல்லையே நல்லாத்தானே இருக்கிரு நீ...

❋ நான் நல்லாத்தான் மாஸ்டர் இருக்கிறன். ஏன் நம்ப முடியல்லயா உங்களுக்கு...

O பின்ன பயித்தியக் கதைகளை எல்லாம் ஆரும் நம்பேலுமா?...

❋ இஞ்சபாருங்க மாஸ்டர்! இது உண்மையா நடக்கிற கதைதான். 100/- ரூபா கட்டி சந்தாதாரராக நீங்க சேர்ந்தா வருசத்துக்கு மூண்டு புத்தகமா அஞ்சு வருசத்துக்கு உங்களுக்கு புத்தகங்கள் வரும். அஞ்சு வருசம் முடிய நீங்க கட்டின 100/- ரூபாவையும் திருப்பித் தருவாங்க .. அது மட்டுமல்ல அதுக்குப் பிறகும் உங்களுக்கு இலவசமாக புத்தகங்கள் கிடைக்கும்

O ஏண்டா அம்பி... உனக்குத்தான் ஏதோ தட்டிட்டு என்று நினைச்சா, நீ எனக்கும் தட்ட வச்சிடுவா போல கிடக்கு...

❋ இஞ்ச பாருங்க! ஒருவருக்கும் தட்டயுமில்ல தடுமாறையுமில்ல... இந்தா... இத படிச்சுப்பாருங்க

O உதயம்... காலாண்டு சஞ்சிகை... புனித செபஸ்தியார் பிரசுராலயம். அட... இது அந்த கல்லடிப்பால இறக்கத்தில இருக்கிற அச்சகம் தானே.

❋ ஓம்... ஓம்... அவங்கதான் இந்த வெளியீட்ட செய்யப்போருங்க...

O ஆ... திட்டமெலாம் சரிதாண்டா மனே ஆனு... புத்தகம் வருமா?

❋ வருமாவா... வந்திற்றுதே... இப்ப வெளியீட்டு விழாவுக்குத்தான் பொயித்து வாறன். இந்தா பாருங்களன் புத்தகத்த.

O கொண்டா... பாப்பம். தெய்வ தரிசனம் செ. குணரத்தினம். நீ... சொல்றதில விஷயம் இருக்கிருப்போலதான் கிடக்கு... தெரிஞ்சிருந்தா நானும் வந்திருப்பன் வெளியீட்டு விழாவுக்கு.

❋ ஓம் மாஸ்டர் அதிகம் பேருக்கு தெரியா போலதான் இருக்கு... அச்சகத்தில வேல செய்யிற பொடியனுகளும் இதோட சம்பந்தப்பட்ட கொஞ்ச ஆக்களும்தான் வந்திருந்தாங்க.

O எங்கடா மனே... இஞ்சால வந்தா வெடி... அங்கால போனு சூடு எப்படி வரும் சனம்?

❋ எண்டாலும் மாஸ்டர் நம்மட ஆக்கள் இன்னும் சரியா திட்டம் போட்டு, ஆயத்தப்படுத்தி விளம்பரம் செய்து விழா நடத்திறதில கொஞ்சம் அப்படித்தான்.

O சரி அது இருக்கட்டும்... பிறகு விழா எல்லாம் எப்படி நடந்தது. அதச்சொல்லன்...

❋ நம்மட தலைவர் பாக்கியநாயகம் ஐயா தான் தலைமை தாங்கினவர். அவர் வழமை போல அந்தக்கால இலக்கியச் செய்திகள எல்லாம் சொன்னுர். அன்புமணி அண்ணனும் பேசினவர்.

O ஆ... அன்புமணியும் பேசினதா? அந்த மனுசன் நல்லாப் பேசுமே...

❋ ஓம் மாஸ்டர்... அவர்ர பேச்சு விஷயமுள்ள பேச்சுத்தான். 500 சந்தா சேக்கஏலாட்டி இலக்கியத்தப்பத்தி பேசுறதக்கே நமக்கு தகுதி இல்ல எண்டு போட்டாரே ஒரு போடு.

O கொஞ்சம் பொறு... கொஞ்சம் பொறு... ஆ... பக்கட்டுக்குள்ள 100 ரூபா இருக்கு சந்தாவுக்கு தரலாம் இனிச் சொல்லு...

❋ என்னத்த சொல்ல... வெக்கக் கேட்ட ..

O என்னத்துக்குடா மனே வெக்கம்!...

❋ 'நாவல நாங்க வெளியிடுறம். நாவல அனுப்புங்க' எண்டு பேப்பரில எல்லாம் அறிவிச்சும் ஒருவரும் அனுப்ப இல்லயாமே...

O ஆரும் நாவல வெளியிட்டு சம்பாதிக்க நாம ஏன்டா மனே அனுப்போணும்? எழுதினவன்ட உழைப்புக்கும் உருப்படியான தொகை ஏதாவது கிடைக்குமெண்டால் அனுப்புவானுகள். இப்ப இலக்கியம் எண்டா எல்லாம் காசுக்கு பின்னுலதான்!... புகழுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மட்டும் எழுதின காலமெல்லாம் போச்சுடா மனே. இது பொருளுக்காகவும் எழுதுறகாலம்.

❋ ஓ. நீங்க சொல்றதும் சரிதான் மாஸ்டர். நாவலாசிரியருக்கும் ஏதோ குடுக்கிற மாதிரிதான் கதை.

O சரி அதவிடுவிடு. வேற ஆரெல்லாம் பேசினுங்க?

❋ சங்காரவேல் ஐயா ரசிக்கரசிக்க பேசினுர். பல விசயங்களையும் தொட்டு — நாட்டு நிலைமை. நூல் வெளியீடு, எழுத்தனுபவம் வெளியிட்ட நாவல் எல்லாத்தையுமே சுவை யாக சொன்னுர் மனிசன். கல்வியதிகாரி தியாக ராசா ஐயாவும் பேசினுர். சுறுசுறுப்பு இல்லாத சோம்பேறிப் பேச்சு பேச்சததான் விடுங்களன் அந்த மனிசன் எழும்பி நிண்டு லோங்ஸ இழுத்து' பெல்ட்ட இறக்கி, கால ஆட்டி, கைய தூக்கி செய்யிற சேட்டைகள் இருக்கே.. பாக்க பாக்க சீ சீ எண்டிருக்கு. அராவது அந்த மனிசனிட்ட சொல்லக் கூடாது இதுகள பத்தபபடி 250 பிரதிகள் நான் பொறுப் பெடுத்து வித்துத்தருவன் எண்டு சொன்ன அவர்ற ஆர்வத்தை பாராட்டத்தான்வேணும். கடைசியா நூலாசிரியர் நன்றி உரை எண்டு ஆரம்பிச்சி நாவல் எழுந்த பின்னணியபத்தி பெ...ரீ..ய விளக்கமொண்டு சொன்னுர். இன் னென்டையும் சொல்லவேணும் மாஸ்டர். ஒரு அச்சகம் நல்ல முயற்சிகளை செய்யுது... சிறப்பாச் செய்யுது எண்டதுக்காக மற்றொரு அச்சகத்த — அதுவும் கனகாலமாக கிழக்குப் பகுதி நூல் வெளியீடுகளுக்கெல்லாம் கை கொடுத்த அச்சகத்த குறைகள் இருந்தாலும் கூட பகிரங்கமாக — பச்சையாக பெயர் சொல்லி குற்றஞ்சாட்டினது எனக்கென்னவோ நாகரிகமாப்படல்ல.

O அது சரி மனே... இப்படித்தான்... நெல் லோட புல்லும் வளர்றபோல நல்லதோட, சில பொல்லாப்புகளும் நாத்தடுமாறி வாற தான் என்ன...

❋ ஆனு மாஸ்டர்... இந்த நூல் வெளியீட் டுத் திட்டம் ஒரு நல்ல முயற்சி. புது முயற்சி ஆக்க முயற்சி. இதுக்கு நாமெல்லா ருமே ஆதரவு கொடுக்கோணும். வெளியிடு பவர்களும் நேர்மையோட தொடர்ந்து செயற் படவேணும்.

O ஒண்டா மனே நீ சொல்றது உண்மை தான. திட்டம் போடுறது கெட்டித்தன மில்ல. செய்றதுதான் கெட்டித்தனம். அப்ப நான் போப்போறன்... இந்தா நூறு ரூபா இருக்கு. எண்ட பேரையும் எழுதிப்போட்டு எனக்கும் புத்தகங்கள அனுபபச் சொல்லு. என்ன... பொயித்துவாறன்.

— **எம். வீ.**

# இறைவன் சந்நிதியில் இரண்டாம் ஆண்டு



# செல்வன் மைக்கல் ஞானதாஸ்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1963 - 01 - 28 | 1986 - 01 - 19 |

இறைவன் சந்நிதியில்
இரண்டாண்டு கழிந்தாலும்
எங்கள் இதயத்தில்
இன்னும் நீ வாழுகிறுய்
உயிரான நினைவுகளை
எங்களுக்கு தந்துவிட்டு
உயிர்விட்டு நீமட்டும்
உயரத்தே சென்றுயோ?
உயிர்வாழும் இறைவன்றன்
பொன்னடியில் நீவாழ்ந்து
பசியாறிப் பெருவாழ்வு
தான்காண வேண்டுகிறேம்.


**வேண்டுவோர்:**
சகோதர சகோதரிகள், அம்மம்மா
உறவினர்கள், நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 47

(புனித யாகப்பர் எழுதிய திருமடல்)




பரிசு:

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**25 - 02 - 88**

முழுப்பெயர்: ...........................................................................................

முகவரி : ...........................................................................................

## இடமிருந்து வலம்

1. இதனை அடக்க கடிவாளம் தேவை.
2. இவர்கள் தங்கள் கைகளைத் தூய்மையாக்க வேண்டுமென அறிவுரை கூறுகின்றார்.
5. இது எங்குள்ளதோ அங்கு குழப்பமும் இருக்கும்.
7. இவருக்கும் உதவி செய்ய வேண்டும்.
8. சாயல் முழு உருவத்தைக் காட்டவில்லை.
10. இந்த நீரிலிருந்து நன்னீர் வராது.
11. நோயாளியின் மேல் பூசப்படுவதற்கு கடைநிலை இல்லை.
12. வான்படைகளின் ஆண்டவருக்கும் இது உண்டா?
13. மழை இல்லாது போன மாதங்கள்.
14. ஆபிரகாம் இது கொடுத்ததால் ஏற்புடையவரானார்.
15. இந்த விதையிலிருந்து இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வென்னும் கனி விளைகிறது

## மேலிருந்து கீழ்

3. பாவத்தால் கடவுளை விட்டுப் பிரிந்து வாழ்வது இதற்கு ஒப்பிடப்படுகிறது.
4. தயக்கம் உள்ளவன் இதன் அலைக்கு ஒப்பாவான்.
6. இது அழுகையாக மாறவேண்டுமென ஆசிரியர் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

7. பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்து இதனைத் தின்று விடும்.

9. அறிவற்றவன்.

10. இதனை எதிர்த்துப் பொய் பேசவேண்டாம்.

11. மழை பெய்யக் கூடாது என்று செபித்தவர்.

12 விசுவாசமுள்ள இது நோயாளியைக் குணமாக்கும்.

13. ஆன்மா நடுநிலை தவறினால் மீட்பு இல்லை.

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 45 முடிவுகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. அப்போஸ்தலன் | 1. அடித்தளம் |
| 4. கைதி | 2. போதகன் |
| 6. கதைகள் | 3. தங்கம் |
| 7. தனன்லம் (தன்னலம்) | 5. திருப்பணி |
| 8. லிப (பலி) | 9. வலிமை |
| 9. வலை | 10. புற்று |
| 10. புறணி | |
| 11. கூலி | |
| 12. வெற்றி | |
| 13. மகிமை | |
| 14. வெறுப்பு | |

## போட்டியாளர் கவனத்துக்கு!

தொண்டனில் பிரசுரமாகும் விவிலியக்குறுக்கெழுத்துப்போட்டிக் கூப்பனில் நிரப்பி அனுப்பப்பட்டால் மட்டுமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். வேறு வகையில் வரைந்து அனுப்பப்படும் படிவங்கள் போட்டியில் சேர்க்கப்பட மாட்டாது என்பதை போட்டியாளருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

— நிர்வாகம் —

## பரிசு பெறுவோர்:

1ம் பரிசு

விஜிநா பெர்னாண்டோ
7ம் வட்டாரம்,
மூதூர்.

2ம் பரிசு

செல்வி. லொறேற்றா ருகல்
லூர்த்துமாதா ஆலயம்,
பாலையூற்று,
திருகோணமலை.

## பாராட்டுப் பெறுவோர்:

அவுலின் ஜெயசீலன்
சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

யோசப் சந்தணம்பிள்ளை செபமாலை
மே/பா. பங்குத்தந்தை
லூர்து அன்னை ஆலயம்,
பாலையூற்று,
திருகோணமலை.

ஜெரிண்டன் ஜோண்சன்
மாதா கோவிலடி,
பாலையூற்று,
திருகோணமலை.

செல்வி இருதயநாயகி கந்தையா
5, அரசாங்கவிடுதி ஒழுங்கை,
கல்லடி,
மட்டக்களப்பு.

ஜெயராஜ் நிவாஷ்கர்
6, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

பங்குபற்றியோர்: 71

சரியான விடை அளித்தோர்: 44

அனைவருக்கும் எமது நன்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper in Sri Lanka.

# உங்கள் பக்கம்

## இன்னும் சிறக்க இடமுண்டு

இலக்கியச் சிறப்பிதழில் இடம் பெற்ற 'தமிழ் இலக்கியமும் விமசர்னமும்' என்ற கட்டுரை குறிப்பிடத் தக்களவு சிறப்புற அமைந்திருந்தது. ஆசிரியர் அவ்வப் போது இலக்கியவாதிகளின் கருத்துக்களோடு தனது கருத்தையும் ஒருங்கே கலக்கவிட்டு தனது கருத்தை வெளிக்கொணர்ந்தது பாராட்டிற்குரியது. எனினும் ஆசிரியர் இலக்கியம் என்றால் என்ன? இலக்கியம் எதைக் கருவாகக் கொண்டுள்ளது? என்பவற்றைக் கட்டுரையின் ஆரம்பத்தில் தெளிவு படுத்திருப்பின் கட்டுரை இன்னும் சிறப்புற அமைந்திருக்கும்.

எஸ். ஏ. நாதன்
இருதயபரம்,
மூதூர்.

## கனம், காத்திரம்

இலக்கியச் சிறப்பிதழ், புத்தகத்தின் கனத்தைப் போலவே படைப்புகளும் கனமாகவும் காத்திரமாகவும் இருந்தன. கவிஞர் செ. குணரெத்தினத்தின் பேட்டி நல்ல பல கருத்துகளைத் தந்தது. ஒரு சிறப்பிதழுக்கு மூன்று கவிதைகள் போதாது. இன்னும் கவிதைகளைச் சேர்த்து இருக்கலாம்.

M. L. M. அன்சார்
காத்தான்குடி.

## இலக்கிய மணியின் வாழ்த்து!

அண்டரும் புகழ்ந்து மெச்சும்
அருந்தமிழ் மலர்கொள் தேனை
மொண்டினி தாய் சுவைத்து
முதிர்ந்திடு கலைவல் லோரைக்
கொண்டு பல் கோண ஆய்வில்
கோவை செய் இலக்கியச் சீர்த்
தொண்டினில் நின்று உலாவும்
தொண்டனே நீடு வாழ்க

இலக்கியமணி ஆரையூர் நல்
அளகேச முதலியார்.

## சுவைத்திடுவீர்!

தேனொடு கந்தருளும்
தேன்மலராம் தொண்டனடா
தேனோடு தமிழுண்ண
தேடியதைச் சுவைத்திடுவீர்
கட்டுரைகள் சிறுகதைகள்
கருத்தூன்றும் கவிபிசைகள்
கொட்டுகடா வான்மழையாய்
கொண்டிதனைச் சுவைத்திடுவீர்

செல்வன். சிகண்டிதாசன்
சித்தாண்டி.

## கருத்துக்காகக் காத்திருக்கிறேன்.

மார்கழித் தொண்டனில் இடம்பெற்ற சுறிஞ்சிபுரான் எழுதிய மறுமலர்ச்சி — கனத இக்காலத்திற்கு ஏற்ற கருவூலமாக அமைந்துள்ளது.

விவிலியத்தில் மெசியா — மீட்பர் என்ற கருத்தோவியத்தை வழங்கிய றெக்ஸ் ஜோசப் அவர்களிடமிருந்து இதுபோன்ற விவிலிய விளக்கங்களை அறிய என்போன்ற நெஞ்சங்கள் காத்துக்கிடக்கின்றன.

ஜே. அருளப்பு - ஆசிரியர்
அம்பாறை.

## பாராட்டு

இலக்கியச் சிறப்பிதழ் தந்த தொண்டன் குழுவினருக்கு பாராட்டுக்கள். சகல விடயங்களும் தரமாகவே இருந்தன.

செல்வி அ. ஸ்ரெலா பாரதி
அம்பாறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper in Sri Lanka.

## மரியாளின் ஆண்டிலே

## மரியாளுக்கொரு மலர்ச்செண்டு

**மரியாளின் ஆண்டை முன்னிட்டு**
**மறைக்கல்வி நடுநிலையம்**
**மனமுவந்து வெளியிடுகின்றது**

# அவள் ஒரு கேள்விக்குறி?

**மரியாளைப்பற்றி மக்கள் மனதில் எழும்**
**பல வினாக்களுக்கு விடை பகர்கின்றது**

## "அவள் ஒரு கேள்விக்குறி?"

**மலர் கிடைக்குமிடம்:**

**மறைக்கல்வி நடுநிலையம்**
**ஆயர் இல்லம்,**
**மட்டக்களப்பு.**

இச்சஞ்சிகை, மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 08-2-88ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media